www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்



மார்ச், 1992.
விலை ரூ.3.

படிப்பகம்

www.padippakam.com

# முளையில் தெரியும் பயிர்

"அப்போது நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரிக்குப் போகும் பாதையில் தினமும் ஒரு பெண்ணைப் பார்ப்பேன். அவள் ஒன்றும் அப்படி கண் மயக்கும்படியான அழகி இல்லை, ஆனால், அவளுடைய கூந்தல் இருக்கிறதே, அது என்னைப் பைத்தியமாய் அடித்துவிட்டது. எத்தனை நீளம்! நன்கு படிய வாரிவிட்டு ஒற்றைப் பின்னலாகப் போட்டுக் கொண்டு வருவாள். இன்னும் ஒரு சாண் நீண்டால் தரையில் புரளும்போல் அப்படியொரு வளர்த்தி. அதுவே ஓர் அதிசயமாய், அழகாய் என்னைக் கவர்ந்துவிட்டது. போகப் போக, அவளே ஓர் அழகாய் மாறிப் போனாள். என்னையறியாமல் அவளிடம் ஒரு பற்று வளர்ந்துவிட்டது. ஒரு தங்கையிடம் அன்பு கொள்வதைப் போல் அன்பு கொண்டேன். சின்ன வயதில் என்னை விட்டுக் காணாமல் போன தங்கை என் முன்னே அந்தக் கூந்தலை மாத்திரம் அடையாளமாகக் காட்டிக் கொண்டு வருவதைப் போல் மயங்கினேன். 'அம்மா, நீ என் தங்கையல்லவா?' என்று கேட்க வேண்டும் போல் மனம் கிடந்து தவிக்கும். ஒரு நாள் நான் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது அவள் அங்கே வந்தாள். என்னையும் பார்த்தாள். கண்களும் உதடுகளும் மிகவும் கனிவாக நகைப்பதே போல் எனக்குப் பட்டது என் அன்பு அவளுக்குத் திருப்தியாய் இருப்பதுபோல் தோன்றியது. எனக்குக் கட்டிப் பிடிக்க முடியாத ஆனந்தம். அவளும் நானும் அருகருகே நின்று கொண்டிருந்தோம். பஸ் வந்துவிட்டது. அவள் முன் நகர்ந்தாள். அவளுக்கடுத்து நான். அத்தனை அருகில் நின்று அவள் சடையை அன்றுதான் பார்த்தேன். பார்த்துக் கொண்டேதான் நகர்ந்தேன். ஆனால் அடுத்த கணம் நான் வீக்கித்து நின்று விட்டேன். என் பார்வை பொறிகலங்கிச் சுழன்றது. நிதானித்துக் கொண்டு அவளைப் பார்த்தேன். நான் பஸ்ஸில் ஏறாததைக் கண்டு அவள் முகம் சாம்பிவிட்டது. அந்தப் பார்வையே எனக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. ஒன்றுமில்லை. அது பொய்க் கூந்தல். சவரி முடி அது. உடனே அறைக்கு வந்துவிட்டேன். என் உடம்பெல்லாம் எரிந்தது. 'அவள் ஒரு பொய்த்தி; நான் ஒரு குருடன்' என்று தலையிலடித்துக் கொண்டேன். அது என் உணர்வில் ஓர் இடி போலத் தாக்கிவிட்டது. இப்போது நான் வெறுக்கிறேன் என்று கூடச் சொல்ல முடியாது. அதைவிட, அப்படி ஒரு சாட்டை மாதிரி நீளமான சவரி அவளுக்கு எங்கிருந்து கிடைத்தது என்ற ஆச்சரியம்தான் மிஞ்சுகிறது."

—தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய
மாத இதழ்
மார்ச், 1992

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது

தனி இதழ் விலை ரூ.3.
ஆண்டுச் சந்தா ரூ 36.
சந்தாவை M.O. செய்க.

படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் தெளிவும் உள்ள எல்லா வகை இலக்கிய வெளிப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை 21இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், 31, T.K.S.நகர் சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:

**ஆசிரியர், கவிதாசரண்,**
**31, டி.கே.எஸ். நகர்,**
**சென்னை-600019.**

இதழ் பற்றிய உங்களின் மதிப்பீடுகளும் எதிர்பார்ப்புகளும் இதழின் தளத்தை விசாலப்படுத்தும். இதழுக்கான உங்களின் சந்தாவும் நட்பும் இதழின் நலத்தைச் செழுமைப்படுத்தும்.

## படைப்பாளர்கள்:

**கவிதாசரண், இராம. கண்ணப்பன் என்.ஆர். தாசன் நெல்லை. சு.முத்து துறவி அஷோக் ராஜா சு.சுரேஷ் ரவி வா.மு.கோமு மு. குணசேகரன் நு.ர.ஆறுமுகம் குடந்தை பரிபூரணன் மேலும்,.....**

**"நான் சேற்றில் கிடக்கலாம்; என் கண்களோ சூரிய வட்டத்தையே சிறைபிடிக்க முயல்கின்றன. நீ விண்ணில் பறக்கலாம்; ஆனால் உன் கழுகுக் கண்கள் அழுகும் பிணத்தைத் தேடியே மண்ணில் புரள்கின்றன. நம் உடல் எங்கேயும் இருக்கலாம். மனம் எங்கே நிலைக்கிறதோ அதுதான் மனித நிலைப்பு."**

**- கவிதாசரண்**

படிப்பகம்

www.padippakam.com

# ஏதும் இனி மீதமிலை

ஆசிரியர் பக்கம்

முன்னும்இல்லை; பின்னும்இல்லை.
மோகம்செய்யத் தேகம்இல்லை.
அன்னை இல்லை; பிள்ளை இல்லை.
ஆளுகின்ற பாசம்இல்லை.

எல்லைஇல்லை; தொல்லைஇல்லை.
ஏங்கமனத் தாங்கல்இல்லை.
சொல்லைப்பல கூறுகட்டி
வெல்லுகின்ற ஆசையில்லை.

போகமில்லை; சோகமில்லை.
புத்திபுலன் ஏதுமில்லை.
யூகமில்லை; யுக்தியில்லை.
யோகம்செய்யும் வித்தையில்லை.



நோட்டமில்லை; நாட்டமில்லை.
நெக்குருக நெஞ்சமில்லை.
ஆட்டம்பல காட்டிஅதில்
ஆடுகின்ற பாடுமில்லை.

காலையென்றும் மாலையென்றும்
காலவரை யேதுமில்லை.
ஆலைக்கரும் பாய்நெரிந்து
அல்லல்படும் தொல்லையில்லை.

மூச்சினையும் பேச்சினையும்
மூட்டைகட்டிப் போட்டபின்னே
நீச்சுநினை வேதுமில்லை;
நித்திரைக்குப் பஞ்சமில்லை.

காலமகள் கையில்சுகம்
காட்டிவர வேற்றபின்னே
ஏலத்திற்குப் போனதையா;
ஏதும்இனி மீதமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

என்னைத்தமிழ் அன்னைபெற்றாள்
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று | மார்ச், 1992 | இதழ் ஐந்து

# வருக, இரவே!

மாலைக் கதிரவன் மணப்பெண் 'நாளை'யைக்
காலைப் பொலிவுடன் கடிமணம் கொள்ள,
மங்கலக் கோலஞ்செய் மழைவெயி லாடியும்
தங்கக் கதிர்கொண்டு தன்னெழில் புனைந்தும்
மேகச் சிலதியர் முகமலர் நாணிட
மோகக் கனலொடு மேற்கடல் மூழ்குவன்.

ஆங்கு,—
நீல விசும்பிடை நித்திலம் தெளித்தும்,
கோலக் கதிர்மதிக்(கு) ஆடரங் கெடுத்தும்,
கதிரவன் அரசில் சதிர்விளை யாடி,
மதிமயக் குற்ற மானிலந் தன்னை
ஆழ்ந்த அமைவுடன் அறிதுயில் ஊட்ட
ஆழ்கடல் கீழ்நின் றடைக்கலம் நீங்கி
மண்ணகம் நோக்கி நடைபயின் றணையும்
பெண்ணலங் கனிந்த பூரண இரவே!
மனமறி யாமல் உனைவர வேற்கக்

படிப்பகம்

www.padippakam.com

கனவுக ளோடு கடற்கரை நோக்கிக்
கைபுனை வினைஞரும், கணக்கரும், வாழ்வின்
செய்வினை புரிந்து சோர்வெய் தியவரும்,
பொன்னலங் கருதிப் போற்றிடும் செல்வரும்
இன்னலுக் குலைந்தேஏங்கிடும் வறியரும்,

தழுவிய கரத்தொடு தளர்நடை பயின்று
முழுமதி யிணையென வருங்கா தலரும்,
பிழைபடும் மேனியைப் பொலிவுறப் புனைந்து
விழிக்கடை மொழியை விளைத்திடு வோரும்,
புன்னகை மாதரின் பூக்கரம் பற்றி

சின்ன நடைபயின் றனையும் சிறாரும்,
வெற்றினைச் சாட விதிவகுப் பாரும்,
தற்கொலை நாடித் தடம்விடுப் பாரும்,
என்றோர் ஆயிரம் மாந்தர்கள் கூடும்
மன்றத்தில் நானுமோர் அங்கமாய் வந்தேன்.

வருக, இரவே! உன் வலக்கால் முன்மிதித்(து)
அருளொடும் வருக! என் அகத்துள் நுழைக!
ஆதவன் வெளிச்சம் அண்டத்தை விழுங்கும்!
வேதமும் கூட வெறுமைபோல் சுருங்கும்.
நல்லிர வே! உன் மையிருட் சோதியில்

சல்லடைக் கண்ணும் சமுத்திர மாகும்!
ஆதவன் மறைத்ததற் கப்பாலும் காட்டும்
வேதமும் சாரமும் நீயே ஆதலின்,
சோர்ந்து கிடக்கும்என் சிந்தனை விளக்கைச்
சார்ந்துநீ சற்றே தூண்டுக! வருக!

படிப்பகம்

www.padippakam.com

விவாத சிந்தனை

# தமிழுண்ணிகள்

/கவிதாசரண்/

நான் மேலும் தொடர்ந்தேன்:

''மொழியைப் பொருத்தவரை, நாங்களெல்லாம் உங்களை நம்பியிருப்பது போய், தமிழாசிரியர்களாகிய நீங்கள் உங்கள் நம்பிக்கையை எங்கேயோ தாரை வார்த்துவிட்டு, 'தமிழ் வாழ்க!' என்று கூடிக் குரல் கொடுத்தே வளர்த்துவிடலாம் என்பது போல ஒரு மௌடீகத்தை எப்படி வளர்த்துக் கொண்டீர்கள்? அதிலிருந்து எப்போது விடுதலை பெற்று, விழிப்புற்று, செய்ய வேண்டுவது என்ன என்பது பற்றிச் சிந்திக்கப் போகிறீர்கள்? நீங்கள் மொழியாசிரியர்கள். பள்ளிக்கு வரும் இளைய தலைமுறையே உங்கள் கவனிப்புக்கு உள்ளாகிறது. உங்களால் பாதிக்கப்படாமல் அவர்கள் உங்களைக் கடந்து செல்ல முடியாது. ஆனால், உங்களால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்களா? தொல்காப்பியர், நன்னூலாருக்குப் பிறகு தமிழ் வளரவே இல்லை, அல்லது வளரவே வேண்டாம் என்று கண் மூடிக் கற்பித்துக் கொண்டிருக்கும் உங்களால் அவர்கள் பாதிக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது. இல்லையென்றால், மொழி வகுப்புகள் வெறும் இளைப்பாறும் வகுப்புகளாக, அல்லது வம்பு வளர்க்கும் வகுப்புகளாக, உதாசீனத்தையும் ஒழுக்க மீறல்களையும் நீங்கள் சகித்துக்கொள்ளும் வகுப்புகளாகச் சபிக்கப்படும் அவலம் ஏன்? உங்களிடமன்றி ஒரு ரிக்ஷாத் தொழிலாளியிடமிருந்து குழந்தைகள் இயல்பாக, நட்புணர்வோடு தமிழ் கற்றுக்கொள்கிறார்களே! 'அது தமிழா?' என்பீர்கள்; எது, எதனோடு கலந்து, எதுவாக வினை புரிந்து, தமிழாகப் பயிராகிறது என்பதைப் பற்றி யோசிக்கவே மறந்து போன நீங்கள். தமிழின் இருப்பு, நடப்பு, வளர்ப்பு பற்றி உங்கள் அனைவரிடமும் 'தன்னை முன்னிலைப் படுத்தாத' தவம் கைக்கொண்டு, மொழியை முன்னிலைப்படுத்தி, ஒத்த கண்ணோட்டமும் ஒருங்கிணைந்த செயல்பாடும் என்றைக்கு உருவாகும்? உருவாகி, நம் அச்சங்களைத் துச்சப்படுத்த முடிந்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! அதை அனுபவிக்க வேண்டும். ஆகுமா?''

படிப்பகம்

www.padippakam.com

''ஆகவேண்டும் என்றுதானே இத்தனை அலசல்களும்? ஆனால், ரிக்ஷாத் தொழிலாளரிடம் குழந்தைகள் இயல்பாகத் தமிழ் கற்றுக் கொள்கிறார்கள் என்பதுதான் உண்மையோ?''

''உறுத்துகிறதல்லவா? இன்னொன்றும் கவனியுங்கள். ரிக்ஷாக்காரர்களிடம் பேச மட்டுமே தமிழ்; மற்ற மேதாவிகளிடம் பேசுவதற்குப் பிற உயர்ந்த மொழிகள்- என்றொரு புதிய இனமே உருவாகியிருக்கிறது, தெரியுமா? தமிழில் கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை என்று நினைத்துவிட்டார்களா?''

''உண்மைதான். தமிழில் கற்றுக்கொள்ள மனிதப் பண்புகள்தாம் அதிகம் இருக்கின்றன. மற்றவை இரண்டாம்பட்சமே.''

''அவற்றைத்தான் நாமே கற்றுக்கொள்வதையும் கடைப்பிடிப்பதையும் முடக்கி வைத்திருக்கிறோமே! 'மனிதன் என்பவன் இந்தப் பிரபஞ்சத்தையே சந்தைக்குக் கொண்டு வந்து, கூறுகட்டி விற்கவே பிறந்திருக்கிறான்' என்பது போலச் சந்தைப் பொருளாதாரத்தில் அடித்துப் புரளும்போது, கூறு கட்டி விற்க முடியாத மனிதப் பண்புகளை வைத்துக்கொண்டு என்ன பண்ணுவான்?''

சிறிது நேரம் மௌனம் சூழ்ந்தது. ஆனால், எனக்குச் சொல்ல வேண்டியது இன்னும் இருந்தது.

''இந்த உதாரணத்தைக் கற்பனை செய்வோம். தமிழின் மீது ஆசைப்பட்டு ஓர் ஐரோப்பியன் உங்களிடம் கற்றுக்கொள்ள வருகிறான். நீங்களும் மனம் ததும்பும் மகிழ்ச்சியுடன் தமிழின் தூய்மைக்குச் சிறிதும் பங்கம் வராமல் கற்பிக்கிறீர்கள். தான் கற்றுக்கொண்ட மொழியில் சுயமாகப் பேச, எழுத, வரும் எனும் நிறைவு வந்தபின், உங்களிடமிருந்து விடைபெறுகிறான். விடைபெற்று, நேரே ஐரோப்பா சென்றிருந்தால் ஒரு தொல்லையில்லை. அவனோ தமிழ்ச் சகோதரர்களோடு கொஞ்சிக் குலாவ ஆசைப்பட்டு, செந்தமிழ் நாட்டின் தேரோடும் வீதிகளில் இறங்கி, ராஜ நடை போடுகிறான். தான் தமிழறிந்தவன் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகக் கையில் ஒரு நவீன இலக்கிய நூல். தான் ஒரு நண்பன் என்பதைக் காட்டிக்கொள்ளும் வகையில் நயமாகப் பேசுகிறான். நம் தமிழ் நாட்டார் ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள். 'அவன் என்ன மொழி பேசுகிறான்? ஒருவேளை நம் தமிழாய் இருக்கக் கூடாதா! மலையாளமா? கன்னடமா? தமிழ்தானா?' அவர்கள் பேசத் தொடங்கியதும் அவனுக்கு அதிர்ச்சி! 'இவர்கள் பேசுவதுதான் தமிழ் என்றால் நாம் இத்தனை நாளும் கற்றுக் கொண்டது என்ன மொழி? தமிழ்தான் என்றால் அது என்ன வேத மொழியா? வேத மொழிதான் மாறாமல், கூடாமல், குறையாமல் இருக்கும். அப்படி இருக்கவேண்டும் என்பதற்காகத்தானே பாமர நாவிலிருந்து பறித்தெடுத்து, வழங்கிப் பொலிவதற்கு வம்சம் இல்லாமல் செய்து, அருங்காட்சிப் பொக்கிஷமாக ஏடுகளில் மூடி வைக்கப்பட்டுள்ளது சம்ஸ்க்ருதம்? இவர்கள் பேசும் மொழி

படிப்பகம்

www.padippakam.com

யும், இதோ என் கையிலிருக்கும் நவீனத்தின் மொழியும், கட்டமைப்பிலும் நடைமுறை ஒலிப்பிலும் ஏறக்குறைய ஒத்துப்போகின்றனவே! நான் எவ்வளவு பெரிய அறிவீனத்தில் காலத்தை வீணடித்திருக்கிறேன்! வீதியில் நடமாடி, வாழும் தமிழைக் கற்றுக் கொள்வதை விடுத்து, ஒரு வேதியரிடம் போய் மந்திரம் கற்றுக் காலம் கடத்தி யிருக்கிறேனே!' என்று வருந்தியிருப்பானா, இல்லையா? இது வெறும் உதாரணம் மட்டுமல்ல; உண்மையும் கூட. இது இன்னொரு வகை சிடுக்கு. நவீன எழுத்தாளர்கள் ஏட்டு வழக்குக்கும் பேச்சு வழக்குக்கும் உள்ள இடைவெளியை எவ்வளவோ குறைத்திருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கோ அது பற்றிய கணிப்போ விழிப்போ இன்னும் உருவாகவில்லை. இலக்கியம், சமயம், அறவியல் ஆகிய மூன்று துறைகளில் தமிழ் தன்னிறைவு பெற்றுள்ளது. ஆனால், மானிட வளர்ச்சியில் அன்றாடம் பல நூறு இயல்கள் விழுதுகளாய், கிளைகளாய், தளிர்களாய்ப் பெருகிக்கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் அரவணைத்துக்கொள்ளும் நிலையில் தமிழ் பல்கிப் பெருக வேண்டாமா? வளரும் தமிழ் என்றால் என்ன பொருள்? வளர்ச்சி என்பது பெருத்தல் மாத்திரம் அல்ல; பெருகுதலும் கூடத்தான். வளர்ச்சி நோக்கில் மொழியை மனித வடிவாகப் பாவிப்பதை விட மரமாகப் பாவிப்பது மிகப் பொருத்தமாய் இருக்கும் அல்லவா? மனித வடிவம் முழுமையானது. அதில் வளர்ச்சி என்பது பெருப்பது தவிர வேறென்ன? மனித வடிவில் மெய்யாகவே வளர்வது முடியும் நகமும்தான்; அவ்வப்போது வெட்டியெறிய வேண்டிய வளர்ச்சி. மரத்தில் வளர்ச்சி அப்படியல்லவே! விதையிலிருந்து சிறு முளையாய்க் கிளம்பி, புதிது புதிதாய்த் தன்னைப் பெருக்கிக் கொண்டே போகிறது. வளர்ச்சி என்றால் அதுதான் வளர்ச்சி! மரத்தில் மாறாத அம்சம் அதன் ஆன்மா மட்டும்தான். அடையாளம் தெரியாதபடியான அதன் வளர்ச்சியில் அடையாளம் காட்டும் ஒரே அம்சம் அந்த ஆன்மாதான். மொழியின் வளர்ச்சியும் அதுபோல் இருக்க வேண்டாமா? அப்படி நாம் வளர்த்திருக்கிறோமா? நீங்கள்— தமிழாசிரியர்கள் இதைப்பற்றி யோசித்ததாவது உண்டா?''

நண்பர் மறுமொழியாக எதையும் இப்போதைக்குப் பேச வேண்டாம் என்று தீர்மானித்தவர் போல என்னைக் கொட்டித் தீர்க்க விட்டுவிட்டார். எனக்கும் பொருமல் அடங்கவில்லை.

''பாரதி காலத்தில் தமிழுக்கிருந்த நிலை இன்னும் மாறவே இல்லையே!

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச<br>
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்.

படிப்பகம்

www.padippakam.com

மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழ்மொழிக் கில்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்,

என்று ஒரு பேதை உரைத்ததாகச் சொன்னான் பாரதி. தனது மொழி மீது அவன் கொண்ட அபிமானம், அவன் எண்ணத்திற்கு மாறு சொன்னவனைப் 'பேதை'யாகக் கண்டது. ஆனால் நடைமுறையில் அவன் மேதைதான் என்பதுபோல எதார்த்தம் நம்மைக் கன்னத்தில் அறைகிறதே! அந்தப் பேதையாவது 'தமிழ் மெல்லத்தான் சாகும்' என்றான். ஆனால், நம்மூர் அதிமேதாவிகளோ தமிழின் மரணத்தைக் கணிப்பொறியில் கணித்து 'இன்னும் நூறாண்டுகளில் தமிழே இருக்காது' என்று துடைப்பத்தால் துடைத்துத் தள்ளிவிட்டார்களே! நீங்கள் மரத்துப்போய் அல்லது மரமாகிப் போய்விட்டதால் அல்லவா, 'அது மெய்தான்' என்பதுபோல இதைச் சகித்துக்கொள்ள முடிகிறது! பாரதியே சொன்னான்: 'முன்னோர்கள் அருளாலும், இன்றைய புலவகள் தவத்தாலும் இந்தப் பெரும் பழி தீரும்,' என்று. இன்றைக்கு நீங்கள்தானே புலவர்கள்! பாடிப் பெற்ற காலம் போய், இன்று படித்தே பெற்றிருக்கிறீர்களே இந்தப் பட்டத்தை! கெட்டிச் சாயமாகத்தான் இருக்க வேண்டும். உங்களைத் 'தவ சீலர்கள்' என்று வணங்குகிறான் பாரதி. புலவர்களாக உங்களைப் பார்த்துக் கொள்வதில் பூரிப்பிருந்தால், புதிய பட்டங்களோடு அவனுக்கு விழா எடுப்பீர்கள். உங்களுக்கே உங்கள் பட்டத்தில் உறுத்தல் இருந்தால், அவனை இனப் பிரம்பால் நெட்டித்தள்ளுவீர்கள்.

குறைந்த பட்சம் உங்கள் மனமுக்காட்டைக் களையும் விவேகத்தையாவது என்று பெறுவீர்கள்? 'எவன் தமிழன், எவன் அயலான்' என்று பாகுபடுத்துவதே 'தமிழ் வாழ்க!' என்னும் உரைகல்லை வைத்துத்தான் என்று ஆகிவிட்டது. தமிழுக்குத் தன் ஒரு நூல் மூலமே கோடி புண்ணியம் சேர்த்து விட்ட வள்ளுவன் கூட,—'அகர முதல.....' என்று 'அ'வில் தொடங்கி, '.....கூடி முயங்கப் பெறின்' என்று 'ன்'இல் முடித்து, தமிழின் வரிவடிவத்தில் கட்டுண்டு நின்ற அந்த எழுத்துச் சித்தன் வள்ளுவன்கூடத் தன் நூலில் 'தமிழ்' என்னும் சொல்லை ஒருமுறைகூடச் சொல்லவில்லை. தமிழாய் விளங்கித் தமிழை வளர்த்தவன் அவன்; பெயர் சொல்லிப் பிழைத்தவன் அல்லன். தவசீலன் அவன்; தமிழுண்ணியல்லன் அவன்!''

—விவாதம் இனிமேல்தான் தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com

—சென்ற இதழ் தொடர்ச்சி



# கவிஞர் வினா-விடைகள்

## /நெல்லை சு. முத்து/

### இலக்கியப் பற்று

பழந்தமிழ் இலக்கியங்களின் மேல் இந்த மரபுக் கவிஞர் மூவரும் இயல்பாகவே பற்றுகொண்டிருந்தனர். சங்கப்பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை,சீவகசிந்தாமணி, திருக்குறள் தொடர்பான இலக்கிய வினாக்கள், ஐயப்பாடுகளை இவர்கள் தெளிவுறுத்தும் மறுமொழிகள் குறிப்பிடத்தக்கவை.

'கண்ணகி புரட்சிக் காப்பியம்', 'மணிமேகலை வெண்பா' ஆகிய புது நூல்கள் பாவேந்தரின் திராவிட இயக்கப் பிரசார வெளியீடுகள்.

'தென்றல்தான் வள்ளுவன், வள்ளுவன்தான் தென்றல்' என்பது கவியரசர் கொள்கை.

அதே வேளையில், ''பழைய புராணங்களிலும் இதிகாசங்களிலும் பொய்க் கதைகள் மலிந்து கிடக்கின்றன' என்பது என்னுடைய கருத்து. அப்படியிருக்க, 'நம்மவர் அவற்றைப் பக்தி சிரத்தையுடன் போற்றத் தகுந்த உண்மை நூல்களென்று பாராட்டுதல் பொருந்துமா?'' என்றொரு அன்பர் வினவ,

''புராணங்கள் முழுதும் சரித்திரமல்ல. ஞான நூல்கள்; யோக சாஸ்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வடிவிலே கற்பனைத் திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் கூறுவன. இவையன்றி நீதி சாஸ்திரத்தை விளக்கும் படியான கதைகளும் அந்நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பல உண்டு. இவ்வாறு பல அம்சங்கள் சேர்ந்து ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டி, தர்ம நீதிகளை மிகவும் நன்றாகத் தெரிவிப்பதால் அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றி வருதல் தகும்'' என விளக்கம் அளிக்கிறது பாரதியின் 'தராசு'.

### விதி விளக்கம்

அவ்வாறே விதி குறித்துப் பேசும் போது, ''விதி வெற்றிக்குத் துணையாகும். விதியை நம்பி விதை போடாமலிருந்தால் பயிர் விளையாது. விதியை நம்பி உழைத்தால் அநேகமாக விளையும்'' என்கிறார் மகாகவி.

படிப்பகம்

www.padippakam.com

''விதி! சிறு விளக்கம் தருக!'' என வினவும் வாசகருக்கு, ''பதில் சொல்ல முடியாமல் தவிப்போர் பக்கத் துணைக்கு அழைக்கும் சோம்பேறித் தத்துவம்! ஏமாற்றுக் காரர்களின் தொழிலுக்கு உருவமில்லாத மூலதனமும் அதுதான்'' என்கிறார் கவியரசர்.

மேலும், ''ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்ற குறளுக்குப் புதுப் பொருள் கூற விழையும் கண்ணதாசன், ''ஊழ் என்பதற்கு 'முறை' என்பது பொருள். முறையோடு காரிய மாற்றினால் அதனினும் வலிமையானது யாது? இடர் சூழ்ந்தாலும், முறையாக ஆற்றிய செயல் முன்னின்று காக்கும்'' என்கிறார். தம் பதிலுக்கு ''ஞாலம் கருதினும் கைகூடும்'' ''பருவத்தோடு ஒட்ட ஒழுகல்'' போன்ற குறட்பாக்களையே ஆதாரமாக்குகிறார்.

## துறை சார்பு

தம்மளவில் மொழி, பழைய இலக்கியம், தத்துவம், மரபு என்று கூறியபடி சமுதாயத்தினின்று விலகி நில்லாமல், தீவிர சமூகப் பிரச்சினைகள், சமகால தேசியக் கண்ணோட்டங்கள், தமக்குரிய அரசியல் சார்புகள் தொடர்பான தருக்க விவாதங்களில் ஆவேசமுடன் கலந்து கொள்ளும் பண்பு இக்கவிஞர் தம் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் உரிய சான்றாகும்.

தாம் ஈடுபட்டிருந்த திரைப் படத் துறை குறித்து, கண்ணதாசன், பாரதிதாசன் இருவரும் கொண்டிருந்த கருத்துக்கள் சராசரி ரசிகரையும் எட்டக் கூடியன. அவர் தம் தமிழ் ஈடுபாடு கொண்ட வினா விடைகளை, 'தென்றல்,' 'குயில்' ஏடுகளில் காணலாம்.

''துறைதோறும் தமிழர்கள் சிறந்தோங்க வேண்டும் என்கிற அவா 'குயிலுக்கும்,' 'தென்ற'லுக்கும் உண்டு.

''சுகம் எங்கே?' படத்திற்கு வசனம் எழுதியது யார்?'' என்ற கேள்விக்கு, ''தோழர் ஏ. கே வேலன் அவர்கள். கண்ணதாசன் சில பகுதிகள் எழுதிக் கொடுத்தார்; அவ்வளவுதான்'' என்கிறார் கவியரசர்.

''ஏ. கே. வேலன் படத்தில் எல்லாரும் தமிழர்களாமே?'' எனக் கேட்டதற்கு ''வாழ்க ஏ.கே வேலனார்'' என்ற வாழ்த்துரையே பாவேந்தரின் மறுமொழியாகிறது. (குயில் 15-7-1962)

## அறிவியல் கண்ணோட்டம்

விஞ்ஞான ரீதியில் சிந்திக்கத் தூண்டும் எண்ணம் மரபுக் கவிஞரிடை அரும்புவது அபூர்வம். புதுக்கவிஞர்களிடம் இது பற்றி கொஞ்சம் பாசாங்கும் இருக்கக் கூடும். சிறந்த பெருங் கவிஞர்கள் இதற்கெல்லாம் விதி விலக்கு.

''நிலவும் மேகமும் தழுவிக்

படிப்பகம்

www.padippakam.com

கொள்வதை எதற்கு ஒப்பிட லாம்?'' என்று வடசேரியிலிருந்து என். ஆர், சந்திரன் என்கிற அன்பர் 'தென்றல்' இதழின் 'கேள்விப் பெட்டி'யிடம் கேட்டதும் 'நிலவும் மேகமும் தழுவுவதாகச் சொல்வதே இலக்கியம்- விஞ்ஞானம் இரண்டுக்கும் புறம்பாகும்'' என்று வெட்டுகிறார் கவியரசர் கண்ணதாசனார்.

பழஞ்சாண் கற்பனைகளை அறிவ்யல் ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வாறே ஆங்கிலத்தில் சிந்திக்கும் புதுமை எழுத்தாளர்களை பாரதி பரம்பரையினர் என யாரும் ஒத்துக் கொள்வதில்லை.

''ஆங்கிலம் படிக்காவிட்டால் தமிழில் இப்போது வெளிவந்துள்ள கதைகள் அனைத்தும் வெளிவந்திருக்குமா?'' என்று ஒரு சந்தேகம். அதற்குப் பாவேந்வர் விளக்கம் இது:

ஆங்கிலம் படித்திராவிடில் ''கற்பனை உள்ளம் வளர்ச்சி அடைந்திருக்கும். தமிழர் பண்பாடு பாதுகாக்கப் பட்டிருக்கும்; நல்ல நல்ல கதைகள் காலத்தால், இடத்தால் அழியாதனவாக உண்டாயிருக்கும்'' (குயில், 17-1-1961) என்று தீர்க்கமாக முடிவுரைக்கிறார் பாரதிதாசனார்

அறிவியல் பற்றிய ஆக்கபூர்வ நம்பிக்கை இன்றைய கவிஞரிடையே கொஞ்சம் குறைவாகத்தான் தென்படுகிறது. அதிலும் சில புதுக் கவிதை மேதாவிகள் அறிவியல்தொழில் நுட்பத்தின் நாசப் பணிகளைக் காரணங் காட்டிப் புலம்புகிறார்கள் அல்லது பிலாக்கணிக்கிறார்கள்.

ஆனால்—மகாகவியின் விஞ்ஞான ஆர்வம் வியப்பூட்டுகின்றது. நண்பர் ஒருவருடன் 'தராசு' நடத்தும் கலந்துரையாடலைக் கவனியுங்கள்.

''ஸயன்ஸ் என்பதென்ன?''

''ஐரோப்பிய இயற்கை நூலுக்கு இங்கிலீஷ் பாஷையில் ஸயன்ஸ் என்று பெயர்.''

''ஐரோப்பிய இயற்கை நூல்'' என்று தனியாக ஒரு சாஸ்த்ரமுண்டோ?''

''அப்படியில்லை. அந்த சாஸ்திரத்திலே நம்மைக் காட்டிலும் அதிகத் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்,''

''அதிலே என்ன பயன் உண்டாகிறது?''

''புதிய விழி உண்டாகிறது.''

''புதிய விழி என்பதென்ன?''

''பூமண்டலத்தையும் ஸர்வத்தையும் பற்றிய புதிய அறிவு.''

''நமது பூர்விகர்களுக்கு இல்லாத அறிவு இப்போது சாத்தியப் படுமா?''

''அதைப் பற்றிய பேச்சில்லை.''

''நமக்கு இதுவரை இல்லாத அறிவு சாத்தியப்படுமா?''

''முற்படுக; எழுக'' என்றது தராசு.

அவ்வாறே, ''விஞ்ஞானத்திற்குரிய சொற்கள் தமிழில் வேண்டும் என்று தலைவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

சொல்லுவதில் தப்பென்ன?'' என்னுமோர் வினாவிற்கு, ''தமிழில் வந்து கொண்டிருக்கும்விஞ்ஞானச் சொற்களை அவர்கள் இடை மறிக்கிறார்கள். நல்லெண்ணத்தால் சொல்லவில்லை. தமிழில் தமிழருக்கு இருந்துவரும்பற்றைஒழிப்பதே அவர்களின்நோக்கம்'' எனப் பாவேந்தர் குற்றம் சாட்டிப் பதிலுரைக்கிறார். தேவைக்கு அதிகமான வடமொழிச் சொற்களை கலைச் சொல்லாக்கம் என்கிற பெயரில் அன்றைய சில தலைவர்கள் தமிழில் திணிக்க முற்படுவற்கு எதிரான அங்கத முழக்கம் அது.

இன்றைக்கு வந்து கொண்டிருக்கும் வாராந்தரப் பத்திரிகைகளில் எல்லாம் இலக்கியவாதிகள் எழுத்தாளர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, நாவல், இலக்கிய வரலாறு, விமரிசனம் குறித்த வினா விடைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. கவிஞர்களும் தம் கவிதைகளும், அயல் மொழிக் கவிதைகளும் அன்றிச் சமகாலத் தமிழ்க் கவிஞரைக் கூட ஆத்மார்த்தமாகப் புரிந்து கொள்ள எத்தனிப்பதில்லை. ஜனரஞ்சக ஏடுகளிலோ அர்த்தமற்ற வீண் கேள்விகளே மிகுதியும் பிரசுரமாகின்றன.

அறிவியல் வினாக்களுக்கு விடையளிக்கும் அறிஞர்— அத்துறை நிபுணத்துவம் கொண்டவராக இருத்தல் சிறப்பு. ஆனால் இலக்கியத் தரமான கேள்விகளுக்குப் பதில் அளிப்பவரும் மேம் போக்கான இலக்கிய வல்லுநராக இருத்தல் கூடாது. கலையுணர்வுடன், தாம் வாழும் சூழல், சமுதாயம் இனம், நாடு, மொழி குறித்த கருத்துத் தெளிவு உடையவராக இருந்தாலே போதும்.

ஒரு அறிவியலார், கவியுணர்வுடன் திகழ்வதினும் ஒரு கவிஞர் சமுதாயப் பிரக்ஞையுடன் அறிவியல் கண்ணோட்டம் கொண்டு பதில் வழங்கும் போது பெருங் கவிஞராகிறார். அறிவியல் உலகின் அனைத்து நடவடிக்கைகளையும் அதன் பல்வேறு அக, புறத் தன்மைகளையும் புரிந்து கொண்டு கவிதைகளின் ஊடாக மட்டுமின்றி, 'வினா விடை' போன்ற பரஸ்பர தகவல் பரிமாற்றத் தொடர்புகள் வழியாகவும் சஞ்சரித்து தமது ஆளுமையினை வெளிப் படுத்திட வேண்டும். உலகியல் நிலையிலும் படைப்பியல் தளத்திலும் சக மனிதரோடு தாம் இறங்கி வந்து சகஜமாகக் கலந்து கொள்ளும் போதே அவர் மகாகவியும் ஆகிறார்.



ஒரு வகையில் பார்த்தால் ''வினாதல் வினாயவை விடுத்தல்'' என்கிற நன்னூற்பா காட்டுவதுகூட அரியதொரு இலக்கிய வகையே. அன்றியும் சிறந்த கவிஞர்களை இனங் காட்டும் வித்தியாசமான, மிக நுட்பமான கருவி இந்த 'வினா விடை விசாரம்' எனலாம். ○

படிப்பகம்

www.padippakam.com

மூலம்: பாப்லோ நெருடா,
தமிழில்: என்.ஆர்.தாசன்

# மது



இலையுதிர் காலத்து மதுவானால் என்ன?
வசந்த காலத்து மதுவானால் என்ன?
மதுவும் மதுவருந்தும் தோழர்களும் ஒரு மேஜையில் கூடியுள்ளனர்.
மேஜையில் இலைகள் இங்குமங்குமாய் இறைந்து கிடக்கின்றன.
இந்த இலைகள்—
நமது பாடல்கள் எட்ட முடியாத வெகு தொலைவில் உள்ள,
உலகின் மிக பிரம்மாண்டமான எக்யுநாக்ஸ் நதியில் மிதந்து
வந்தவை.
நான் ஒரு சாதாரண குடிகாரன்.
நீ இங்கு வரவில்லை.
எனவே, உனது வாழ்வின் ஒரு பகுதியை நான் பிய்த்து
எறிந்துவிட முடியும்.
என்னைப் பிரிந்து நீ செல்லும் போது,
என்னுடையதாக உள்ள சிலவற்றை நீ எடுத்துச் செல்:
சில ரோஜாக்கள், பழக் கொட்டைகள், கிழங்குகள்.
ஒரு தோழனுடன் இவற்றைப் பகிர்ந்து கொள்.
என்னுடன் சேர்ந்து நீ பாடு;
நாம் குடித்து முடிகிற வரை,
உணவு மேஜை காலியாகிற வரை,
என்னுடன் சேர்ந்து நீ பாடு.
உன் வாய் நிரப்பும் இந்த வெறி மது,
புழுதி படிந்த பழக் குலைகளிலிருந்து நேரிடையாக வருகிறது.
எனது பாடலின் எத்தனை விதமான வண்ணங்கள் கரைந்து
போயின!
பழைய தோழர்களே, வாழ்விலிருந்து வடித்தெடுத்த,
வீரியம் மிக்க விஞ்ஞானம், நட்புறவு, ஆழ்ந்த மென்மை
இவற்றுடன்,
நேருக்கு நேர் நான் வாழ்ந்திருக்கிறேன்.
உங்கள் கைகளை நீட்டுங்கள்.
என்னுடன் இயல்பாக நடந்து வாருங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

எனது வார்த்தைகளிலிருந்து எது வெளி வருமோ,
அல்லது ஒரு செடியிலிருந்து எது உண்மையாகக் கசிந்து
வெளிப்படுமோ, அதற்கு மேல் எதையும் எனது வார்த்தைகளில்
தேடித் திரியாதீர்கள்.

ஒரு தொழிலாளியைக் காட்டிலும் அதிகமாக என்னை ஏன்
கேட்கிறீர்கள்?

உங்களுக்குத் தெரியுமா?

என் மீது விழுந்த சம்மட்டி அடியை ஒன்றின் மேல் ஒன்றாக
அடுக்கி ஒட்ட வைத்திருக்கிறேன்.
எனது சொந்த மொழியைத் தவிர வேறு எதன் மூலமும் பேச
நான் விரும்பவில்லை.
இந்தக் காற்றுக்குத் தாக்குப் பிடித்து உங்களால் நிற்க
முடியாது போனால்,
மருத்துவர்களைத் தேடிப் போங்கள்.
இருத்தலற்ற நதிகளின் மொழி, அர்த்தமே இல்லாத
அலங்காரச் செய்யுட்கள்,
இவையே காதல் கவிதைகள்.
ஒரு கிடாரோ அல்லது மௌனமோ,
திரும்பத் திரும்ப இந்தக் காதல் கவிதைகளையே நமக்குக்
கொண்டு வந்து தரும் போது,
ஹோ......
நாம் பூமியின் கச்சா மதுவைப் பற்றிப் பாடுவோம்.
இந்த இலையுதிர் காலத்தில்......
மதுக் கிண்ணங்களை மேஜை மீது தட்டித் தட்டி,
நாம் ஆரவாரிப்போம்.

## செருப்பு மனிதர்கள்:

தோலுக்குப் பதிலாகக் குற்றமில்லாத பசும் பொன் தகட்டினால் செய்து, குத்துவார், ஆணி ஆகியவற்றுக்குப் பதிலாக ஒளி மிக்க வைரக் கற்களைப் பதித்துச் செய்யப்பட்டதாயினும், செருப்பு ஒருவனுடைய காலுக்குத்தான் அணியாய் இருக்கும். அது போலவே, பெருஞ் செல்வமுடையவர்களானாலும் இழி குணம் கொண்ட கீழ்மக்களை அவர்கள் செய்யும் தொழில்களால் இன்னாரென்று கண்டறியலாம்.

**-நாலடியார்**

படிப்பகம்

www.padippakam.com

ego ego ego ego ego ego ego ego

# ஈகோ ஈகோ ஈகோ

ego ego ego ego ego ego ego ego

## /அஷோக் ராஜா/



அப்பா மேல் சட்டையின்றி வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். கதவு லேசாகத் திறந்திருக்க உள்ளிருந்து டி. வி. சத்தம் வந்து கொண்டிருந்தது. அப்பாவின் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்திருந்தவருக்கு நடுத்தர வயதிருக்கும். அடிக்கடி சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார். அப்பா அப்படி யொன்றும் ஹாஸ்யமாகப் பேசுகிறவரல்ல. நான் அப் புதியவரைப் பார்த்த வண்ணம் கேட்டைத் திறந்தேன். உள்ளே வந்து, கொண்டியை மறுபடி போடும் சத்தம் கேட்டு அப்பாவின் பேச்சும் அவர் சிரிப்பும் நின்றன. என்னை அப்பா எப்போதும் போல மலர்ச்சியோடு பார்த்து ''இப்பதான் வர்றியாப்பா?'' என்றார். என் பதிலைக் கவனிக்காமல் பக்கத்தில் இருந்தவரிடம் திரும்பி. ''என் கடைசிப் பையன். சிவகாசில சென்ட்ரல் எக்ஸைஸ்ல இருக்கான்,'' என்றார். நான் அவரைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டு உள்ளே சென்றேன். டி.வி. முன் உட்கார்ந்து கொண்டிருந்த அண்ணி எழுந்து வந்து என் கையிலிருந்த சூட்கேசை வாங்கிக் கொண்டாள்.

கொடியில் காய்ந்துகொண்டிருந்த அண்ணனின் லுங்கியை எடுத்துக் கட்டிக்கொண்டு, வெளியே வந்தேன். அப்பாவுக்கு எதிரே, சற்றுத் தள்ளி சுவரில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்து கொண்டேன். அண்ணி காபியோடு வந்தாள்.

''தம்பி சிவகாசிலயா இருக்கீங்க?'' என்றார் புதியவர்.

''ஆமாங்க.''

''சிவகாசிலதான் நம்ம சொந்தக்காரப் பொண்ணு பாங்க்கில வேலை பாக்குது. மீனாட்சின்னு பேரு. அடுத்தத் தடவை வரும்போது அப்படியே பாத்துட்டு வாங்க. ஏகாம்பரம்னு சொன்னாத் தெரியும்.''

''ம். சரிங்க. யஷ்வந்த் எங்க கண்ணி?''

அப்போதுதான் யஷ்வந்த் அவனுடைய கிட்டி சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்து என் முன்னே நிறுத்தி, ''ஹை! சித்தப்பா!'' என்று ஓடிவந்து மடியில் விழுந்தான். அவரோடு அசுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு யஷ்வந்தைக் கொஞ்சத் தொடங்கினேன். அவர் என்னையும் அப்பாவையும்

படிப்பகம்

www.padippakam.com

மாறி மாறிப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார் பேச்சின் நடுவே 'மீனாட்சிக்குக்கூட மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார். அதை ஏனோ அவர் சத்தமாகச்சொன்னதாகப் பட்டது. எனக்கும் அது புரிந்தது. மனமும் உதடும் தன்னிச்சையாகப் பெருமையில் புன்னகைத்தன. அவர் பேசியதைக் கண்டு கொள்ளாதவன் மாதிரி உள்ளே வந்தேன். அவர் விடை பெறும்போது உள்ளே வந்து என்னை 'அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்து வரும்படி' மீண்டும் சொல்லிவிட்டுப் போனார்.

சிவகாசி திரும்பிய பிறகு அவரிடம் ஒப்புக் கொண்டபடி நான் அந்தப் பெண்ணைப் பார்க்க முயலவே இல்லை. 'மீனாட்சி' என்கிற எளிமையான அந்தப் பெயர் என் மனதில் எந்த விதமான சுவாரஸ்யத்தையும் ஏற்படுத்தவில்லை. மறுபடியும் நான் ஊருக்குப் போக நேர்ந்த போது தொலைபேசியிலாவது செய்தியைச் சொல்லிவிடலாம் என்று தோன்றியது. டைரக்டரியில் அவளது பாங்க் எண்ணைத் தேடிப்பிடித்துப் பேசினேன்.

''யெஸ். திஸ் ஈஸ் ஆர்சிபி'' என்றது ஒரு பெண் குரல்.

''மிஸ் மீனாட்சி ப்ளீஸ்.''

''மீனாட்சிதான்பேசறது.''

''ஹலோ. ஐ'ம் க்ருஷ்ணா. இங்க பக்கத்தில சென்ட்ரல் எக்ஸைஸ்ல ஒர்க் பண்றேன். போன வாரம் திருச்சி போயிருந்தப்போ உங்க ரிலேடிவ் ஒருத்தரைப் பார்த்தேன். பேர்கூட ஏகாம்பரம்னு சொன்னார்.''

''ஆஹா!'' மறு முனையில் அவளது குரல் உற்சாகமாக மாறிற்று. அவரைப் பற்றியும் அவரது குடும்ப நலன்கள் பற்றியும் அவரோடு எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பு பற்றியும் ஆர்வத்தோடு விசாரித்தாள். அந்தக் குரலில் ஒரு மிதமிஞ்சிய கனிவும் தோழமையும் தொற்றிக்கொண்டிருந்ததை உணர்ந்தேன். ஈடுபாடு எதுவுமின்றிப் பேசத் துவங்கியவன் என்னையறியாமல் உற்சாகத்தோடு பேசத் தொடங்கினேன். மெல்லமெல்ல அவள் என்னைப் பற்றி விசாரித்தாள். அவளிடத்தில் நான் ஒரு சாதாரண குமாஸ்தா எனச் சொல்லிக் கொள்ளத் தயக்கமாகத்தான் இருந்தது. சில சமயம் பேசுவதற்கு விஷயம் இன்றி மௌனமாகக் கழிந்த போதும் நான் ரிசீவரை வைக்கவில்லை. எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த யாஸ்மின் அடிக்கடி என்னை நிமிர்ந்து பார்த்தாள். பேசுவதற்கு விஷயங்களைத் தேடியபடி அவளாக முடிக்கட்டும் எனக் காத்திருந்தேன்.

''என்ன க்ருஷ்ணா? யாரோட அவ்ளோ இன்ட்ரஸ்டிங்கா பேசினீங்க? உங்களுக்கு ஃபோன் வந்து நான் பாத்ததே இல்லை,'' என்றாள் யாஸ்மின்.

''ஜஸ்ட்... ஒரு ஃப்ரண்ட்''

''ஃப்ரண்ட் மாதிரி தெரியலையே,'' என்றாள் கண்களில் குறும்பு மின்ன.

சங்கோஜத்தோடு சிரித்தேன். ஒன்றும் சொல்லவில்லை.

படிப்பகம்

அந்த முறை ஊருக்கு வந்ததும் நானாக ஏகாம்பரத்தின் வீட்டைத் தேடிச் சென்று அவரிடம் மீனாட்சியோடு பேசியது பற்றி விரிவாகக் கூறினேன். நேரில் பார்க்க சமயமில்லை என்று கூறினேன். இந்த முறை போனால் கட்டாயம் பார்ப்பதாக உறுதி கூறிவிட்டுவந்தேன்.

அவளுடைய அலுவலக நேரமும் என்னுடைய அலுவலக நேரமும், ஒன்றாக இருந்ததால் மீனாட்சியை நேரில் பார்க்க, வாய்ப்பு கிடைக்காமலே இருந்தது. ஏகாம்பரத்தைப் பார்த்த செய்தியை டெலிஃபோனில் சொல்லிவிட முடியுமென்றாலும் நேரில் பார்க்கும்போது அதை முன்னிட்டு இன்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே என்று நினைத்தேன். உரையாடல் நிகழ்த்துவதென்பது, அதுவும் புதியவர்களோடு என்றால்—எனக்கு அத்தனை எளிதான விஷயமில்லை. எனவே அவளோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதற்கான உத்திகளை சேகரிக்க வேண்டி இருந்தது. அந்தக் குரல் இன்னும் என் மனதிற்கு நெருக்கமாக ஒலித்துக் கொண்டே இருந்தது. மென்மையும், பிரிய முள்ள மனைவியின் கொஞ்சலைப் போன்றும் இருந்த அந்தக் குரல் என்னை முழுமையாக ஆக்ரமித்து விட்டது.

இந்தச் சமயங்களில் மீனாட்சி நேரில் எப்படியிருப்பாள் என்று எனக்குள் நானே சில தோற்றங்களை வரைந்து பார்த்துக் கொண்டேன். அப்படிப்பட்ட கற்பனைகள் என் தனிமை நிறைந்த வாழ்க்கைக்கு இதமூட்டுவதாக இருந்தன. எப்படியெப்படியோ நான் வரைந்து பார்த்தாலும் அந்தக் குரலுக்குரிய பொருத்தமான தோற்றம் குறித்து எனக்குத் திருப்தி ஏற்படவேயில்லை. இந்த அதிருப்தியும் மீண்டும் அதற்கான முயற்சியும் மீனாட்சியைப் பற்றிய நினைவுகளை சுவாரஸ்யப் படுத்திக் கொண்டிருந்தன.

பொதுவாக நல்ல குரல் வளம் கொண்ட பெண்களுக்கு அழகான தோற்றம் இருக்காது என்பது என் நண்பர்களிடையே அப்போது நிலவி வந்த அவநம்பிக்கை. இதை உறுதிப் படுத்துவது போல எங்களுக்குச் சில அனுபவங்களும் ஏற்பட்டிருந்தன. அதை நான் அப்போது ஓரளவு ஏற்றுக் கொண்டிருந்தாலும், மீனாட்சியைக்குறித்து எனக்குள்ளிருக்கும் கற்பனைகளை அது பாதிப்பதுபோல எனக்குத் தோன்றிற்று. எனவே அந்த அவநம்பிக்கை மூட நம்பிக்கையைப் போன்றதென்று விவாதித்தேன். அழகு என்பதன் வரையறைகள் குறித்து சந்தேகங்கள் எழுப்பினேன். மனதில் பரவசம் பரவச் செய்யும் எந்த ஒரு நிகழ்ச்சியும் செயலும், பொருளும் அழகானதே என்றெல்லாம் சொன்னேன். மீனாட்சியின் தோற்றம் குறித்து ஏன் இத்தனை அக்கறை எடுத்துக் கொள்கிறோமென்று எனக்கே குழப்பமாக

www.padippakam.com

இருந்தது. மனம் மட்டுமே அழகான ஒரு க்ருபியைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா என்று என் நண்பர்கள் சவாலாகக் கேட்டபோது சற்று தயக்கத்தோடுதான்— அந்தச் சமயத்தின் வாதத்திற்காகத்தான் ஒப்புக் கொள்ள முடிந்தது. இந்தத் தயக்கம்தான் மீனாட்சியை நேரில் பார்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டாமலிருக்கச் செய்தது.

என் அலுவலக விஷயமாகவே அவளது பாங்கிற்குப் போகும் வாய்ப்பு வெகு சீக்கிரம் வந்தது. மீனாட்சி எப்படி இருக்கக் கூடுமென்ற கற்பனையும், அவளை நேரில் சந்திக்கவிருக்கிற ஆவலும் என்னைத் தன்னிலை மறக்கச் செய்து கொண்டிருந்தன. அவளது பாங்கில் பெண்களே நிறைய பேர் இருந்ததால் மீனாட்சியை ஊகிப்பது சற்றுக் கடினமாகத்தான் இருந்தது. அங்கே தோரணையாக உட்கார்ந்து கொண்டிருந்த அதிகாரியிடம் விசாரித்தேன்.

''மீனாட்சியா ...? குமார்... கிளியரிங்ல மீனாட்சி இருப்பாங்க. கூட்டிட்டு வா.''

நீளமாயிருந்த காபினைத் திறந்துகொண்டு ஒரு பெண் என்னையே ஆச்சரியத்தோடு பார்த்த வண்ணம் வந்தாள். மனம் ததும்பிநிற்க நான் அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன். எனக்குள் வரைந்து வைத்திருந்த அந்த ஓவியத்தை ஒத்திருந்தது அவளது தோற்றம். அந்த முகம் எத்தனையோ நாட்கள் பழகிவந்ததைப் போல மிகவும் பரிச்சயமாக இருந்தது. மை தீட்டிய அந்தக் கண்கள் பெரிதாகவும் குளுமையாகவும் இருந்தன. எவ்விதத் தயக்கமுமில்லாமல் நான் அவளைப் பார்த்து அதிகப்படியாகவே புன்னகைத்தேன்.

''நான் க்ருஷ்ணா. உங்களுக்கு ஒரு தடவை ஃபோன் பண்ணினேன்.''

''ஓ!'' அவள் விழிகள் மேலும் மலர்ந்தன. என்னை ஸ்டாஃப் ரூமுக்குக் கூட்டிப் போனாள். அவளது கூந்தல் அடர்த்தியாக சற்றே பொன்னிறத்தோடு இருந்தது. மல்லிகையையும், கனகாம்பரத்தையும் சேர்த்துச் சூடியிருந்தாள். சிறிதும் களைப்பே தெரியாத முகம் இதழோரத்தில் எப்போதும் இருந்த புன்னகையில் கனிவு வழிந்தது.

அன்று நாங்கள் என்ன பேசிக் கொண்டோம் என்பதெல்லாம் எனக்குச் சரியாக நினைவில் இல்லை. அவள் என் முன்னே ஒரு ராஜகுமாரியின் நளினத்தோடு அமர்ந்திருந்ததும், தலையசைத்துப் பேசும் போதெல்லாம் கூந்தலிலிருந்து மல்லிகைப் பூக்கள் விழுந்து கொண்டிருந்ததும், அவளது வெண்ணிறப் பாதங்களில் மருதாணி பாதி அழிந்தும் அழியாமல் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்ததும், எல்லாமே ஒரு இனிய கனவு போலத்தான் இருந்தன அவள் பாங்க் டீமில் 'கேரம்' ஆடிக் கொண்டிருப்ப

படிப்பகம்

www.padippakam.com

தையும் கிரிக்கெட் ரசிகை என்பதையும் பேச்சினூடே தெரிந்து கொண்டேன். கிரிக்கெட் பற்றி புள்ளி விவரங்களை அவள் அதிகம் தெரிந்திருந்தாள்.

எனவே, கிரிக்கெட் பற்றி எனக்குத் தெரிந்த அளவில் பேசுவதுகூட சாத்தியமில்லாமல் போய்விட்டது. இடைவிடாது விவரங்களாய் அவள் பேசிக் கொண்டிருந்ததை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று அன்று திங்கட் கிழமையாதலால் வேலை அதிகமாயிருப்பதாகத் தெரிவித்து அவளாகவே விடை பெற்றுக் கொண்டாள்.

அதன் பிறகு தினமும் அரை மணி நேரம் தொலைபேசியில் அவளோடு பேசுவது வழக்கமாகிவிட்டது. நேரில் பார்த்து பேசுவதை விட இது மிகவும் சுலபமாயிருந்தது. என் முக பாவத்தில் பொங்கும் மிதமிஞ்சிய பரவசத்தை அவள் கவனிக்க ஃபோனில் வாய்ப்பில்லாமல் இருந்தது எனக்கு வசதியாக இருந்தது. எனது ஆஃபீஸ் பற்றியும் என் பொழுதுபோக்குகள் பற்றியும் நிறையப் பேசித் தீர்த்தேன். என்னை முழுமையாகப் பேசி முடித்து விட்ட மாதிரி தோன்றிற்று. இருப்பினும் அவளுக்கிணையாக சுவாரஸ்யமாகப் பேசுவதற்காகக் கிரிக்கெட் புள்ளிவிவரங்கள் அடங்கிய புத்தகங்களைத் தேடிப் பிடித்து வாசிக்கத் தொடங்கினேன். இந்திய கேரம் சாம்பியன் மரிய இருதயத்தின் 'டைமிங் ஷாட்' களைப் பற்றி நான் கேள்விப் பட்டிருந்ததையும் பார்த்ததையும் சற்றே கற்பனை கலந்து சொல்லி அவளுக்குப் பிரமிப்பூட்ட முயன்று கொண்டிருந்தேன்.

நான் அவளோடு பேசிக் கொண்டிருக்கும் சில சமயங்களில் என்னை லைனில் காத்திருக்கச் சொல்லிவிட்டு அலுவலக வேலைகளையும் இயல்பாகக் கவனித்த வண்ணமிருந்தாள். அப்படி அவளுக்காகக் காத்திருக்கும்போது ஆரம்பத்தில் எதுவும் தோன்றா விட்டாலும், நாளடைவில் எனக்குச் சலித்துப் போகத் துவங்கிற்று. நானும் இதே சமயத்தில் ஃபோனில் பேசுவதற்குரிய ஒரு தோரணையையும் குரலில் செயற்கையான மென்மை ததும்பும் பணிவையும் வரவழைத்துக் கொண்டிருந்தேன். எனவே, முதல் முறையாக மீனாட்சியின் குரலைக் கேட்டபோது ஏற்பட்ட பரவசம் கலந்த கிளர்ச்சி குறைந்து கொண்டே போயிற்று. அவள் என்னைக் காத்திருக்கக் கோரும் நேரம் அதிகரித்துக் கொண்டே போவதுபோல உணர்ந்தேன். அந்தச் சமயங்களில் என்னை நானே சுய விமர்சனம் செய்து கொள்ள ஆரம்பித்தேன். அவளோடு பேசிக் கொண்டிருப்பதில் எனக்கிருந்த ஆர்வத்தை எல்லை மீறி வெளிப்படுத்திக் கொண்டிருப்பதாக ஓர் ஐயம் தோன்றியது. அவள் எனக்காக ஒரு முறைகூட ஃபோன் செய்ததில்லை என்ற உண்மை எனக்குள் ஒரு தாழ்வான அபிப்பிராயத்தைத் தோற்றுவித்தது.

படிப்பகம்

www.padippakam.com

நான் இடையிடையே ஊருக்குப் போய் வந்தபோது நானாகத் தான் ஏகாம்பரத்தின் குடும்ப விவகாரங்களை அவளுக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது. தொலைபேசியில் பேசும் போது அக்கறையோடு கேட்டுக்கொள்வது மாதிரிதான் இருந்தது. என்றாலும் அவளாக என்னிடம் பேசுவதில்லை என்ற உண்மை என்னை அதிகமாக உறுத்தத் தொடங்கிற்று.

இம்முறை ஊருக்குப்போவதைத் தெரிவித்துவிட்டு அவளாகப் பேசும் வரை நானும் பேசுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன்.

''யெஸ். திஸ் ஈஸ் ஆர்சிபி''

''க்ருஷ்ணா பேசறேன். ஊருக்குப் போறேன். ஒரு ரெண்டு நாள் ஆஃபீஸ்ல இருக்க மாட்டேன்.''

''அப்படியா? ஹாப்பி ஹாலிடேஸ்.''

அவள் மேற்கொண்டு எதுவும் பேசுவதற்குள் நான் ஃபோனை வைத்துவிட்டேன். நான்கு நாட்கள் கழித்துத்தான் ஊரிலிருந்து திரும்ப முடிந்தது. ஆஃபீசுக்கு வந்ததும் யாஸ்மினைப் பார்த்து ஆவலோடு கேட்டேன்.

''ஃபோனா? உங்களுக்கு எதுவும் வரவே இல்லையே, க்ருஷ்ணா.''

எனக்கு ஏமாற்றமாக இருந்தது. இருப்பினும் என்னுடைய தீர்மானத்தை உறுதிப் படுத்திக் கொண்டேன். அடுத்த நான்கைந்து நாட்களிலும்கூட எனக்கொன்றும் ஃபோன் வரவில்லை. ஃபோன் மணியடிக்கும் போதெல்லாம் என் வேலையை நிறுத்திவிட்டு ஆர்வத்தோடு காத்திருந்தேன். யாஸ்மின் அதை அட்டெண்ட் செய்து வேறு யாரையெல்லாமோ கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். டெலிஃபோன் ஏமாற்றத்தை வேறு விதமாகச் சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றேன். மீனாட்சிக்கு உடல்நிலை சரியில்லாமல் ஆஃபீஸ் வராமல் இருந்திருக்கக் கூடுமென்று எண்ணினேன். ஒருவேளை அவள் தொலைபேசியில் என்னை அழைத்து, யாஸ்மினைத் தவிர வேறு யாரோ அட்டெண்ட் செய்து, எனக்கு அதைத் தெரிவிக்காமல் விட்டிருக்கலாம் என்றெல்லாம் ஒரு நெடுங்கதையளவுக்குக் காரணங்களை யோசித்துக் கொண்டிருந்தேன். பெரும்பாலும் வேலைப் பளு குறைந்திருக்கும் மாலை நேரங்களில் தான் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். மீனாட்சியோடு பேசுவதை நிறுத்திய மாலை நேரங்களில் அந்த நினைவு அதிகமாக என்னை வாட்டிக் கொண்டிருந்தது. அவளோடு ஃபோனில் பேசுவதில்லையே தவிர மானசீகமாகப் பேசிக் கொண்டுதான் இருந்தேன். ஒவ்வொரு நாளும் கண் விழிக்கும் போதெல்லாம் அன்று அவளிடமிருந்து ஃபோன் வருவது போலவும் இத்தனை நாட்கள் ஃபோன் செய்யாததற்கு வருத்தம் தெரிவிப்பது போலவும் சுகமான கற்பனைகளை வளர்த்துக் கொண்டேன். இக்கற்பனைகள் எதுவும் நிஜமாக

www.padippakam.com

வில்லை. இனிமேல் அவளைப் பற்றி நினைப்பது அர்த்தமில்லாதது என முடிவு செய்தேன். அவளோடு நான் வளர்த்துக் கொண்ட தொடர்புகளை முறித்துக் கொள்வது என்று சங்கல்பம் செய்து கொண்ட போது யாஸ்மின் என்னை அழைத்தாள்.

''க்ருஷ்ணா, உங்களுக்கு ஃபோன்.''

ஆர்வத்தோடு ரிசீவரை நோக்கி ஓடினேன். அவள் பேசாததால் எனக்கொன்றும் பாதிப்பில்லை என்று காட்டிக் கொள்ள விரும்பி, குரலில் உற்சாகத்தையும் வெற்றி கொண்ட பெருமிதமும் காட்டாமல், இயல்பாக,

''யெஸ். க்ருஷ்ணா ஹியர்'' என்றேன்.

வினாடியில் என் முகம் மாறிற்று. நான் பெண்டிங் வைத்திருந்த வேலைகள் பற்றி எங்கள் சூப்பரின்டென்ட் எங்கோ இன்ஸ்பெக்ஷன் போன இடத்திலிருந்து அர்ச்சிக்கத் தொடங்கினார். விதவிதமான பொய்களால் அவரைச் சமாளித்துக் கொண்டிருந்த போதே மீனாட்சி 'இந்த நாட்களில் டிரான்ஸ்மெண்டிற்காக நாகர்கோயில் செல்ல விருப்பதாகத் தெரிவித்திருந்தது நினைவுக்கு வந்தது. அர்ச்சனை முடிந்ததும் மீனாட்சியின் எண்ணை அவசரமாகச் சுற்றினேன்.

''யெஸ். திஸ் ஈஸ் ஆர்சிபி''

அதே குரல்தான். அவள்தான். நாகர்கோயில் போகவில்லை போலிருக்கிறது. இதுநாள் வரை ஊரில் இருந்தபோதும் என்னோடு பேச அவளுக்குத் தோன்றவில்லை. இதெல்லாம் எனக்கு இழப்பே இல்லை. நல்ல அரசாங்க வேலை; போதுமான சம்பளம் எனக்கு.

நத்திங் ஈஸ் லாஸ்ட்.

எதுவும் பேசாமல் மௌனமாக ரிசீவரைக் கீழே வைத்தேன். அப்படிக் கீழே வைப்பதற்குள் மீனாட்சி மீண்டும் ஒரு முறை தன் கனிவு மிளிரும் குரலில், ''யெஸ். திஸ் ஈஸ் ஆர்சிபி'' என்று சொல்லியிருக்கக் கூடும் என்றும் தோன்றிற்று. ○

## மேன் மக்கள்:

உலகத்தையே ஒரு குடைக் கீழ் ஆளும் பேரரசனாயினும், உலகின் எங்கோ ஒரு மூலையில், ஒரு குறுக்குத் தெருவில், சின்னஞ்சிறு இடத்தில் வாழைப் பழக் கடை வைத்திருப்பவராயினும், தாங்கள் செய்யும் தொழிலைப் பொய் கலக்காமல் மனப்பூர்வமாகச் செய்து, பிறருடைய பாராட்டைப் பெறும்படி வாழ்கின்றவர்களே உண்மையில் மேன் மக்கள்.

-மகா கவி

படிப்பகம்

www.padippakam.com

# காற்றின் நாயகன்

## இராம. கண்ணப்பன்

''நான் கண்ணதாசனைப் போல் கவிஞராக வளர ஆசைப்படுகிறேன். எனது ஆசிரியர்கள் ஓய்வு நேரங்களில் பேசிக் கொண்டதில் என் மனதில் பதிந்தது பாரதிதாசனும், கல்யாணசுந்தரமும் (புரட்சியில்) சமுதாயம் என்ற ஒரே திசையில் சென்றார்கள். கண்ணதாசனோ எல்லா திசைகளிலும் சென்று வந்தவர். அவரைப் போல எல்லாவற்றையும் சொல்லும் கவிஞனாக வளர ஆசைப் படுகிறேன். 4ஆம் வகுப்பு முடிந்து 5ஆம் வகுப்பு வரும்போது கடைசி ஆண்டு விழாப் பாட்டுப் போட்டியில், 'பாடித் திரிந்த பறவைகளே, கூடிக் களித்த தோழர்களே, பிரிந்து செல்கின்றோம்' என்ற பாடலை நான் பாடினேன். எனக்குப் பரிசு கிடைக்கவில்லை. பாரதியார் பாடலைப் பாடியவனுக்குப் பரிசு கிடைத்தது. ஆனால் பாராட்டு, அவனைவிட எனக்குத்தான் கிடைத்தது. ஓய்வு நேரங்களில் நூலகம் சென்று எளிய தமிழ் இலக்கியங்களைப் படித்து வருகிறேன்.

—எம்.சங்கர் குமார்
புதுக்கோட்டை''
தினகரன் ஞாயிறு மலர்— வசந்தம்
**27-10-91**

உலக சமயங்கள் அனைத்தும் சில செய்திகளை மட்டும் ஒற்றுமையாக வலியுறுத்துகின்றன. அவற்றில் ஒன்று நம்பிக்கை.

'நீ என்னவாக ஆகவேண்டும் என்று விரும்புகிறாயோ அதுவாகவே நீ ஆவாய்' என்று போதிக்கின்றன.

'மனம் போல வாழ்வு' என்று நமது பழமொழிகள் நிரூபிக்கின்றன.

'மரணமில்லாமல் பெருவாழ்வு வாழலாம்' என்று வழி கூறுகின்றன திருமந்திரமும் சித்தர் நூல்களும். எவ்வாறு ஒழுகினால் அவ்வாறு வாழலாம் என்று வழி காட்டிச் சென்றார் வள்ளற் பெருமகன்.

இவ்வாறெல்லாம் முயன்று வாழ்ந்தவர் யார்?

www.padippakam.com

கேள்வியே பதிலாக மிஞ்சுகிறது. அதில் விஞ்சி நிற்பது நம்பிக்கை மட்டுமே.

தெருவுக்குள் வராத திருமந்திரங்களையும், திருவருட்பாக்களையும் கருத்துச் சிதையாது கற்பனை வளத்தோடு பாமரனையும் செவியுறச் செய்தவர் கண்ணதாசன்.

நமது முன்னோர்கள் மொழிந்த நன்மைகளை எல்லாம், வாழ்வியல் நெறிகளை எல்லாம் நம்பிக்கை மந்திரங்களாகப் பொழிந்து தந்தவர் கண்ணதாசன்.

'சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே.
தத்வ மசி; தத்வ மசி; நீயே அஃ்தாம்!'

என்று பாடினான் ஞானக்குயில் பாரதி

படித்தவர்களுக்காகவும், படிப்பவர்களுக்காகவும் சொல்லப் பட்ட பாரதியின் வரிகளைப் பாமரனையும் கேட்க வைத்துப் பாட வைக்க வேண்டும் என்று விரும்புகிறார் கவியரசர்.

இங்கே அவர் தனக்குள் ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்கிறார்.

''சாமி நீ; சாமிநீ... அப்படி யாவது எப்படி?''

'சிவனே' என்று சித்தத்தை அடக்கும் யோக முறைகளிலா?

'சராசரி மனிதனால் ஆகாத காரியம்' என்று முடிவுக்கு வருகிறார்.

எளிமையாக, மிக எளிமையாக ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளத் தக்கவாறு 'சாமி நீ' ஆகும் வழியினை வரி வடிவமாக்குகிறார்..

'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்!'

எப்படி?

கதைக்கு வருவோம்.

குடும்பத்தின் மூத்த மகன். ஒரு தம்பிக்கும் இரண்டு தங்கைகளுக்கும் அண்ணன்.

தந்தையோ பணி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர். தாயோ குடும்பத்தை மானத்தோடு நடத்தத் தவிப்பவள்.

வேலைக்குப் போகும் தம்பி வாங்குகிற சம்பளத்தின் ஊதாரி.

கல்வி கற்கும் தங்கைகளோ நாரீமணிகள்.

இவன் ஒருவனது ஊதியமே குடும்பத்தைத் தாங்குகிறது.

இந்நிலையில், இவனுக்கு ஒரு காதலி!

அவளோ, 'இவனே கணவன்' என்று மனவுறுதி கொண்டவள்!

தங்கைகளுக்குக் கல்யாணம் முடித்து விட்டால், நிம்மதியாக நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இவன் கருதுகிறான்.

மாப்பிள்ளை தேடல்... சீர்வரிசை... திருமணம்... கடன்...

படிப்பகம்

www.padippakam.com

முதல் திருமணம் நடந்து முடிந்தது; கடன் தொல்லை அவனைத் தொடர்ந்தது. கழுத்தை நெரித்தது.

இந்த நிலையில் தம்பி தனியாகப் போய்விட்டான்.

ஆண்டுகள் நடக்க, கடன் குறைய, அடுத்த தங்கைக்குக் கல்யாணம்.

மீண்டும் பழைய கதை!

கழிந்து போன இளமைக்கு, முதுமை வாழ்த்துக் கூறும் வயதடைகிறான்!

உடைந்த இதயம், சிதைந்த கனவுகள், நிறைவேறாத ஆசைகள், ஏக்கம், துயரம், கசப்பான நினைவுகள்- இவற்றால் தொடுக்கப்பட்ட மாலையான அவன் ஒரு நாள் மனம் போன போக்கில் சாலையில் நடக்கிறான்.

இவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்.

ஆற்றாத இவனது மனதுக்கு அமைதி கிட்ட வேண்டும்.

தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொள்ளும் நிலையிலா அவன் இருக்கிறான்?

இல்லை.

உலகத்தில் இவன் நிலையில் இவன் மட்டும்தானா?

யார் சொன்னது?

எண்ணற்றோர்; எண்ணற்றோர்!

இவர்கள் மனித தெய்வங்கள்!

மனிதர்கள் மட்டும்தானா தெய்வமாகலாம்?

அஃறிணைகளும் அடங்கும்!

அசரீரியாகக் கவிஞரின் ஆறுதல் மந்திரம் ஒலிக்கிறது.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்!
வாழை போலத் தன்னைத் தந்து தியாகியாகலாம்
உருகியோடும் மெழுகைப் போல ஒளியை வீசலாம்!

மனிதன் எப்போது எவ்வாறெல்லாம் தெய்வமாகலாம்?

வறியவருக்கு வாரி வாரி வழங்கும்போது!

இலை, பூ, காய், கனி, பட்டை, தண்டு, கிழங்கு, சாறு என்று தன்னையே தரும்போது!

தன்னையே உருக்கி ஒளி வழங்கும்போது!

இவ்வாறெல்லாம் நீ ஆகி இருக்கிறாயே, அறியாயோ! அறிய மாட்டாய்!

ஆம். எந்த மழலைக்கு, தான் தெய்வம் என்று தெரியும்?

நீ வாழை போன்றவன்; நீ மெழுகு போன்றவன்; உனக்கென ஒன்றில்லாது வாரி வழங்கிய வள்ளல் நீ!

படிப்பகம்

www.padippakam.com

"சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே!
தத்வமசி; தத்வமசி; நீயே அஃதாம்."

கதாநாயகனுக்குச் சொல்வது மேற்கண்ட வரிகளோடு முடிந்து விட்டது.

பொதுவாகத் தொடருகிறார்; ஆறுதலும், சமாதானமும் எல்லோருக்கும் பொருந்துமல்லவா!



ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம்
சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம்
மலர்களாகலாம்
யாருக்கென்று அழுத போதும்
தலைவனாகலாம்!
மனம்.. மனம்.. அது
கோவிலாகலாம்!

ஈரம் உள்ள நிலத்தில்தான் விதை முளைக்கும்; இரக்கம் உள்ள நெஞ்சில்தான் கவிதை சுரக்கும்; குழந்தை பசியை அறியாது; தாயும் அறியாள்; அவளது தனம் அறியும். குழந்தையின் பசிக்குப் பால் சுரந்து தாய்க்கு அறிவுறுத்தும்!

அன்பு! அது பிறர்பால் சுரக்க வேண்டும்.

கசிந்துருகிக் கண்ணீர் மல்கப் பெருக வேண்டும்.

அன்பு மனதில் இருக்கிறது. மனதில் அன்பு நிரந்தரமாகக் குடியேறி விட்டால், அந்த மனது கோயிலாகி விடுகிறது! அப்போது, மனிதன் என்பவன் தெய்வமாகலாம்.

ஒன்றோடொன்று இயைந்து வாழும் மனப் பக்குவமும் ஊக்கமும் அந்த மனக்கோவிலின் மந்திரம் ஆனால்......

கவிஞர் தொடர்கிறார்,



மனமிருந்தால் பறவைக் கூட்டில்
மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே
மலையைக் காணலாம்
துணிந்து விட்டால் தலையிலெந்த
சுமையும் தாங்கலாம்
குணம்... குணம்... அது
கோயிலாகலாம்!

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தியது போன்ற கருத்துகளைக் குறள் காட்டவில்லையா?

படிப்பகம்

www.padippakam.com

இமயத்தையே இராவணன் தன் தலையில் சுமக்க முயல வில்லையா?

அன்பும் நம்பிக்கையும் குணமாகி, அவை மனத்துள் அமர்ந்து விட்டால் மனமே கோயிலாகி விடுகிறது.

சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே;
தத்வமசி; தத்வமசி; நீயே அஃதாம்!

தென்றல் சுமந்து வரும் சுகந்தமாக, முழு நிலவின் ஒளி கனிந்த இதமாக கவியரசரின் அநுபவ ஞான மொழிகள் நம் மனதைப் பதப்படுத்தி, பக்குவப்படுத்துகின்றன.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்—அன்பு கொண்டு அதன் மேல் நம்பிக்கை கொண்டு.

இவை நம்பிக்கை மந்திரங்கள்.

நாமும் ‘அது’ ஆவோம்!

—வளரும்.

## மின்னலைப்போல் ஒருசொல்!

முட்டாள்களும் பிணங்களும் மட்டுமே தங்கள் அபிப்பிராயங்களை ஒருபோதும் மாற்றிக் கொள்ளாதவர்கள்.

—ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல்

மனிதர்கள் உன்னை விமர்சிக்கச் சொல்வார்கள்; ஆனால், அவர்கள் வேண்டுவது பாராட்டை மட்டுமே.

—சாமர்ஸெட் மாம்

மரணம் வாழ்க்கையின் பேரிழப்பல்ல; பேரிழப்பு என்பது நாம் வாழும்போது நம்முள் என்ன மரிக்கிறதோ அதுதான்.

—நார்மன் கெளசின்ஸ்

தியாகியின் குருதியை விட, கல்விமானின் பேனாவில் உள்ள மை புனிதமானது.

—முகம்மது

நாம் வேண்டுவதெல்லாம் அறிவைத் தேடும் குழந்தையைப் பார்க்கத்தான்; குழந்தையைத் தேடும் அறிவை யல்ல.

—ஜார்ஜ் பெர்னாட் ஷா

தவறு செய்யாத மனிதன் பெரும்பாலும் ஒன்றும் செய்யாதவனாயிருப்பான்.

—பிஷப் டபுள்யு. சி. மேகி

தவறு செய்வது மனித இயல்புதான். ஆனால், அழிக்கும் ரப்பர் எழுதும் பென்சிலை விட முன்னதாகத் தேய்ந்தால், நீ அதிகம் தவறு செய்கிறாய் என்று அர்த்தம்.

—ஜெ. ஜென்கின்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

# ஓ! தேவனே!

## /மு. குணசேகரன்/

தேவனே! அன்று நீ
எங்கள் பாவங்களைப் போக்க
உயிரைப் பணயம் வைத்தாய்.
இன்று நாங்கள்
பணத்தைத் தேடிப்
பாவங்களுக்குப்
பணயமாகிறோம்.

நீ சொன்னவற்றை யெல்லாம்
பைபிளுக்குள் பத்திரப்படுத்தி
ஞாயிறுதோறும்
தூசு தட்டி வைக்கிறோம்.
நாங்கள் யாரும்
கடைப்பிடிக்காததால்தான்
இன்னும் அது
வேதமாகத் திகழ்கிறது.

தட்டுங்கள் திறக்கப்படும்
என்றாய்.
தட்டினோம்; திறக்காததால்
நாங்கள் கதவுகளையே
பெயர்த்தெடுக்கிறோம்.

கேளுங்கள் தரப்படும்
என்றாய்.
கேளாமலேயே எங்களுக்குக்
கிடைப்பதெல்லாம்
குழந்தைகளும் வறுமையுந்தான்
எதிரியையும் நேசிக்கச்
சொன்னாய்.
நண்பர்களுக்கும் எங்களால்
துரோகம்தான்
நினைக்க முடிகிறது.

ஆனாலும்
மறு கன்னத்தைக் காட்டு
என்றதை மட்டும்
கடைப்பிடிக்கிறோம்,
முத்தங்களுக்காக.

நாங்கள் கால்களுக்குச்
செருப்பை அணிந்துகொண்டு
மனதிற்குள் அழுக்கைச்
சேர்த்து வைக்கிறோம்.

இங்கே ஒற்றுமையாய்
இருப்பது
பிரிவினைவாதிகள் மட்டுமே.

மாடு மேய்த்தான் கண்ணன்.
ஆடு மேய்த்தாய் நீ.
மக்களை மேய்க்கும்
அரசியல்வாதிகள் யுகத்தில்
அன்று
இரண்டாயிரம் பேர்களுக்கு
இரண்டு அப்பங் கொடுத்து
அதிசயம் புரிந்த நீயே
அதிசயித்துப்போவாய்,
இங்கு விலைவாசிகள் உயரும்
வேகத்தைப் பார்த்து!

மறுபடியும் உயிர்த்தெழுவேன்
என்ற நீ
இதுவரையில் பிறக்கவில்லை.
உன்னைச் சிலுவையில் இட்ட
கொடியவர் இனமோ
இன்றுவரை அழியவில்லை.

சொன்னதை மறப்பது
இங்கே சர்வ சாதாரணம்.
பின்னே தேர்தல் கால
வாக்குறுதிகள் தருவது
எந்தத் தைரியத்திலாம்?

அதனால் சொல்கிறேன்,
மறுபடியும் உயிர்த்தெழுவேன்
என்ற வாக்குறுதிக்காகப்
பிரயத்தனப்பட்டு
ஓ!...தேவனே,
மீண்டும் நீ பிறந்துவிடாதே.

படிப்பகம்

www.padippakam.com

# மூக்குத்திப் பூக்கள்

ஓடாதீர்கள்!.. ஓடாதீர்கள்.
எதற்கு அவசரம்?
நாளையும் சூரியன் வரும்!

○

மேனி முழுக்க
பட்டுப் புடவையின் பகட்டு.
பட்டுப் புழுக்களின் மரணம்!

○

குளத்தின் நடுவிலே
எழில் மிகு தாமரைப் பூ.
பாசி நிறைந்த படிக்கட்டுகள்!

○

சாலையோரம் விளையாடும்
அழுக்குக் குழந்தைகள்.
உதட்டில் வெள்ளைச் சிரிப்பு!

○

ஆகாயம் நிறைய தீபாவளி.
அழகுச் சிரிப்புத்தான்.
குடிசையில் இருட்டு!

○

மலை மீது இளைப்பாறும்
கருமுகில் கூட்டம்.
வயலில் வாடும் பயிர்!

○

பதுக்கி வைத்தான்
பேராசை மனத்தோடு.
அத்தனையும் அழுகிய முட்டை

○

பிழிந்தெடுத்த தேன்
பாத்திரம் நிரம்பி வழியும்.
மிதக்கும் தேனீ சிறகு!

திறந்து கிடக்கும் சாளரங்கள்.
கம்பிகளின் வழியே
பயணம்போகும்பகற்கனவுகள்!

○

ஏர் பூட்டி, நிலம் உழுது,
நீர் பாய்ச்சி, கதிர் அறுத்தேன்.
கடைசியில் வாய்க்கரிசி!

○

ஸ்விட்சைப் போட்டேன்;
குப்பென்று எரிந்த விளக்கில்
தெரிந்தது குருட்டுத்தனம்!

○

கோவிலில் கற்பூரம் ஏற்றினேன்
ஜோதியில் தெரிந்தது
அருகில் நிற்பவள் முகம்!

○

கடல் நிறைய
முத்தும் பவளமும்.
கை நிறைய பிச்சைப்பாத்திரம்;

○

கனவுகளை ஊன்றி ஊன்றி
இதயம் நடக்கிறது.
பாதையெங்கும் முட்கள்!

○

ஒற்றையாய்ப் பறக்கும் பறவை
கூடு கட்ட முடியாத மேகங்கள்
கீழே நீண்ட கடல்!

○

மலையைச்
சுற்றிலும்
மரகதப் பூக்கள்
மௌனமாய்
எரிமலை!



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வு...

/வா. மு. கோமு/



சாந்தாமணி ராமச்சந்திரனது கைக்ளைத் தனது முதுகிலிருந்து மிகப் பத்திரமாய் எடுத்து, அவனது தூக்கம் கலையாமலிருக்கும் பொருட்டு படுக்கையில் வைத்தாள். ராமச்சந்திரன் தனது கை முதுகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வைக்கப் படுவதை அரை குறையாய் உணரும் தூக்கத்திலிருந்தான். எழுந்தவள் அறை விளக்கைப் போடாமலேயே ஜன்னலுக்கு அருகாமையில் சென்று கீழே சாலையைக் கவனித்தாள். மெர்க்குரி விளக்கின் பிரகாசம் சாலையெங்கிலும் வியாபித்திருந்தது! சாந்தாமணியின் பார்வை அவளது நேர் கீழே சாலயில் தெரிந்த எதிர்க் குடிசை வாயிலை நோக்கியது.

குடிசை வாயிலில் மேற்கும் கிழக்குமாய் அவன் போவதும் வருவதுமாய் இருந்தான். அவனது கையில் தடி ஒன்று இருப்பது இவளுக்கு உற்றுப் பார்க்கையில் தெரிந்தது. அவன் உதடுகள் என்ன சப்தமிடுகிறது என்பது இந்த எட்டாம் மாடிக்குத். தெளிவாய்க் கேட்கவில்லை. போவதிலும் வருவதிலுமே அவன் குறியாய் இருப்பது தீவிரமாகவே தெரிந்தது. திடீரென் தடியைத் தரையில் "பொட்" டெனப் போட்டு விட்டுக் குடிசைக் கதவை உதைத்து உள்ளே சென்றவன் சில நிமிடங்களுக்கெல்லாம் கையில் வேறொரு ஆயுதத்துடன் வருவது தெரிந்தது!

"ஆரும் வரப்புடாது. வரப்புடாதுன்னா வரப்புடாது. ஆருமே வரப்புடாது... கேக்க மாட்டியா?..."

சாந்தாமணிக்கு அவளையறியாமலே கண்களில் நீர் கசிந்தது. தான் அழுகிறோம் என்ற நினைவின்றியே அழுதவளுக்கு, தூக்கத்தில் புரண்டுபடுத்த ராமச்சந்திரன் 'சாந்து" எனக் கூப்பிடுவது கேட்டது. இவள் இங்கேயிருந்து, "ம்" என்றாள். ராமசந்திரன் மீண்டும் "சாந்து" என்றான். இம்முறை அழுத்தம் அதில் தெரியவே, "சாந்துக்கு என்னவாம்?" என்றாள். "தூக்கம் வர்லையா?" என்றவனுக்கு, தூக்கம் வரும்போது தூங்குவதாய்க் கூறிவிட்டு கீழே பார்க்க, ராமச்சந்திரன் வேறெதுவும் கேட்கா

படிப்பகம்

www.padippakam.com

மல் மௌனமானான்.

வெளியே திடீரென காற்று பலமாய் வீசிற்று! அமைதியாய்க் கிடந்த சாலையில் புழுதியோடு காகிதங்கள் பறப்பது தெரிந்தது! புரண்டு புரண்டு காகிதங்கள் மேலேறி இறங்கி வேகமாய்ப் போவது இவளுக்குப் புதிதாய்ப் பட்டது. இதையெல்லாம் இப்போதுதான் கவனிக்கிறோமென்ற நினைவும் வந்தது! கீழ் வீடுகளில் திறந்திருந்த ஜன்னல் கதவுகள் சுவரில் படீர் படீரென அடிக்கும் ஓசைகூட வேறு விதமாய்க் கேட்டது! கீழே அவனைக் காற்று கிட்டத்தட்ட மேற்கே நோக்கி இழுத்துத் தள்ளிப் போவது போன்றே இவளுக்குத் தெரிந்தது. அந்த வீதியின் கோடி வரை அவன் அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்தாள். திரும்பவும் எதிர்க் காற்றில் நீச்சல் பழகுபவனைப் போல அவன் வருவதும் தெரிந்தது! அவன் உதடுகள் அசைகின்றனவா என இவள் கூர்ந்து பார்த்தும் தெரியவில்லை. அவன் தலையில் கட்டியிருந்த துண்டை, காற்று பிடுங்கி மேற்கே கொண்டு போயிற்று! அதை நோக்கித் தள்ளாடித் திரும்பியவன் கை நீட்டி ஏதோ பேசி துப்புவது தெரிந்தது! பின் மீண்டும் குடிசைக்கு அவன் வந்ததுமே அதன் ஓரமாய் குளிருக்கு ஒதுங்குபவன் போல ஒண்டி அமர்ந்து, தலையை முட்டிக் கால்களுக்குள் புதைத்துக் கொண்டான்.

அழுகை கட்டுக்கடங்காமல் பீறிடப் பேவதை உணர்ந்தவள் சேலைத் தலைப்பை இதழ்களோடு இறுக்கிப் பிடித்துக்கொண்டு குமுறினாள்.

அதே சமயம் காற்றோடு பெரும் பெரும் துளியாய் மழையும் வந்தது! அவன் வாசலில் கிடந்த தடியை எடுத்துக் கொண்டுகுடிசைக்குள் மறைந்து போனான். கேவலினூடே சாந்தாமணி சடசடவென விழும் மழைத் துளிகளைப் பார்த்தாள்.

''அப்படி என்ன பாத்துட்டிருக்கே வெளியே?'' ராமச்சந்திரன் புரண்டு ஜன்னலோரம் கருமையாய்த் தெரியும் இவள் உருவத்தைப் பார்த்துக் கேட்டான்.

''மழை பெய்யுதுங்க.''

''மழை பார்த்ததே இல்லையா?''

''நைட்ல பார்த்ததில்லை! அதும் இவ்ளோ உயரத்துலேருந்து லைட் வெளிச்சத்துலே.''

மீண்டும் அறை மௌனமடைந்த சமயம் சாலையில் தண்ணீர் வேகமாய் ஓடுவதைப் பார்த்தாள். காற்று இன்னமும் அடித்தபடிதான் இருந்ததென்றாலும் முன்பிருந்த வேகம் அதில் இல்லை.

குடிசையுள்ளிருந்து, ''ஒழுகுறியா நீயி..! ஒழுகுறியா நீயி! தொலைச்சுக்கட்டிப்புடறேன்'' என்று சன்னமாய் வெளி வந்த சத்தம் இவள் காதில் கேட்டது. மழை சுத்தமாய் நின்று விட்ட சமயம் குடிசையின் மேல் கூரை வழியே புகை வருவது தெரிந்

www.padippakam.com

தது! ஆரம்பத்தில் மெதுவாய்ப் படர்ந்து, கூரையின் ஈரத்தை மீறி விரிந்த அது போகப் போக குபுகுபுவென வருவது தெரிந்ததும் இவள் மனது பக்கெனத் துடித்தது! செய்வதறியாது திக்பிரமையில் நின்றாள். இப்போது தீ முழங்குவதும் தெரிந்தது. அவன் இன்னமும் வெளி வந்த பாடில்லாதது இவளுக்குப் பயத்தையூட்டியது.

''ராம், வெளியே வந்துடு ராம். வீடு தீப்பிடிச்சு எரியுது, ராம். அது விளங்காத அளவு கூட நீ பைத்தியமா ராம்... ப்ளீஸ் வந்துடேன்.'' இவள் மனது சப்தமாய்க் கத்திற்று!

''மழை நின்னிடிச்சா?'' ராமச்சந்திரன் கேட்டான். ''ஆமாம் .. கீழ .. கீழ .. அந்த புதுசா போன வாரம் வந்தவன் குடிசை எரியுது தீப்புடிச்சு,'' என்றாள் ''தொலையறான் பைத்தியம், வுடு.'' ராமச்சந்திரன் புரண்டு வேறுபுறம் படுப்பது இருட்டில் லேசாய்த் தெரிந்தது.

கீழே இம்முறை இரண்டு மூன்று பேர் அங்குமிங்கும் கூச்சலிட்டபடி ஓடுவதும், வருவதுமாய் இருப்பது தெரிந்தது! மேலும் ஆட்கள் கூடுவதும் இவளுக்குத் தெரியவே, அவர்களெல்லாம் அவனை காப்பாற்றி விடுவார்களா வென்ற துடிப்பில் பார்த்தாள்.

''பைத்தியம்னா முத்தின பைத்தியம்டா'', ''தீ எரியுது'', ''தண்ணீர் கொண்டா. செத்துத் தொலஞ்சானா தெரியலையே'', ''வெவறமில்லாத கிறுக்கன்'', ''தீய அவனே வச்சருப்பான்'', ''ஊத்து.''

சாந்தாமணிக்குக் குழப்பமாய் ஆள் ஆளிற்கு பேசிக் கொள்வது கேட்டது! தலை தனியே சுழல்வது போன்றவொரு உணர்வில், கால்களை நிலைப்படுத்த முயன்றும் முடியாமல் ''தொப்''பென மயக்கமாகிச் சாய்ந்தாள் அறைக்குள்.



## சுற்றம்

நன்மை பயக்கும் அறமே என் தந்தை; நிறைந்து விளங்கும் அறிவு என்னுடைய தாய்; அழியாத செல்வமாகிய கல்வி என் நண்பன்; தெளிந்த மனத் துணிவே என் தம்பி. இவர்களே என்னுடைய மெய்யான சுற்றத்தார். சுற்றம் என்னும் பெயரில் என்னைச் சுற்றி நிற்போர் அனைவரும் பொய்ச் சுற்றமே.

**அறநெறிச் சாரம்**

படிப்பகம்

www.padippakam.com

# ஞானப் பெண்ணே!

நியாயத்தைச் சொல்லடி ஞானப் பெண்ணே—இந்தக்
காயத்தைக் கல்பம்செய் ஞானப் பெண்ணே!

கள்ளச்சா ராயத்தால் மெல்லச்சா கலாமோ
நல்மணி தச்சமு தாயம்?—இதில்
நாட்டிற் கென்னவா தாயம்?

தெள்ளத்தெ ளியப்ப டித்தவ னும்அதைத்
தேடிக்கு டிப்பதென் மாயம்?—நன்கு
தேர்ந்துசொல் லடிஉ பாயம்!

முள்ளுச்செ டிபுதர் ஓரத்தி லேஎங்கும்
மேவிப்பு ரளுது போதை!—கேள்
ஆவிது றந்திடுங் காதை!

வெள்ளைத்த னமாகக் கள்ளைக்கு டித்தவன்
உள்ளம்ம கிழ்ந்திடும் பாதை—வாழ்
நாளைக்கு டிக்குமு பாதை!

/நு.ர. ஆறுமுகன்/

○ ○ ○

# வீணருக் கஞ்சுவேனா!

பாதையில் கிடந்த வாழைப் பழத்தோலை எடுத்தெ றிந்தேன்;
வீதியில் கிடந்த முள்ளை வேலியில் எடுத்து வைத்தேன்;
''ஏதிவன் கிறுக்கோ'' என்று ஏளனம் செய்வோர் கண்டு
வேதனை கொள்ளு வேனா! வீணருக் கஞ்சு வேனா!

கத்தியை வைத்துக் கொண்டு கைப்பிள்ளை ஆடக் கண்டு,
கத்தியை வாங்கப் பிள்ளை கதறினான்; சுற்றம் என்னைப்
''புத்தியில் லாதான்'' என்னும் புனைப்பெயர் சூடக் கண்டு
சித்தமும் கலங்கு வேனா! சிறுசொல்லுக் கஞ்சு வேனா!

கன்னியைச் சீர்குலைக்கக் காமுகன் பாய்ந்த போது
முன்நின்றம் மகளைக் காத்தேன்; மூர்க்கனின் சூழ்ச்சி யாலே
கன்னியைக் கெடுக்கச் சென்ற காதகன் ஆகி விட்டேன்.
என்மனம் கலங்கு வேனா! இழிந்தவர்க் கஞ்சு வேனா!

/குடந்தை-பரிபூரணன்/

படிப்பகம்

www.padippakam.com

# ஆய்வு நூல்

## தெய்வம் தெளிமின்

(சிலப்பதிகாரத் திறனாய்வு)

—கவிதாசரண்—

பக்கங்கள்: 120 விலை ரூ 14

மூசா இலக்கியம்
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை-600019.

நூலாசிரியர் சிலப்பதிகாரத்தில் திளைத்துத் தோய்ந்தவர். தோய்ந்த தகுதியினோடு ஆய்ந்தவர். இறவாக் காப்பியத்தின் நுட்பங்கள் சுட்டி வெளிப்படுத்துவது எளிமையன்று. எழுத்தாளனின் "பாவனைச் சாளரங்களின்" வழியாகவே இறைவனின் சாதனைச் சிகரங்களைக் காணும் வாய்ப்பு உண்டாகும் என நூலாசிரியர் நூலின் இறுதியிற் கூறும் திறனாய்வு நோக்கில் இவர்தம் அணுகல் நெறியை ஒருவாறு அறியலாம்.

"தெய்வந்தெளிமின்" என்னும் தலைப்பே நமக்கொரு கருத்தை நல்குகிறது. நூலாசிரியர், இளங்கோவடிகள் போற்றும் தெய்வம் கண்ணகியே என்கின்றார். காப்பிய முகப்பில் பொதுவாக இயற்கையைப் பாடுவதன் நோக்கம் பின்னர் இளங்கோ ஏற்கும் தெய்வம் வேறு என்னும் கருத்தையுள்ளிட்டது என விளக்குந் திறம் பாராட்டத் தக்கது.

"ஊடுதல் காமத்திற் கின்பம்" என வருங் குறட் கருத்தி

## நூல்நலம்

னின்றும் வேறுபட்டு, ஊடாப் பான்மை, செய்யாக் கோலங் கொண்ட கண்ணகியின் உயர்வையே காட்டுகின்றது; நூலின் பிறவிடங்களில் ஊடலின் திறங்கள் பேசப்பட்டாலும் கண்ணகி ஊடாமை அவள் தனச்சிறப்பாகவே தெரிவிக்கப்படுகிறது. நகை முகமும் நல்லுரையுமாகப் பொறை மிக்கவளாக நின்ற கண்ணகி, மனந் திருந்தி வந்த கோவலன் மீளவும் திரிந்து விடாமல் காக்கும் வேலியாக அவள் தன் பண்பே நிறுவி விடுவதை ஆசிரியர் நன்கு புலப்படுத்துகின்றார்.

கோவலன் கண்ணகியின் தெய்வீகத் தன்மை கண்டு மருண்டு விலகி நிற்பதாகக் கூறும் ஆய்வுரை பொருந்துவதே. தேவந்தி 'அணியிழை' எனவும் கண்ணகி 'ஆயிழை' எனவும் இளங்கோ அடிகள் குறிக்கும் விதத்தை இந்நூலாசிரியர் நுட்பமாகப் பயின்றுரைத்துள்ளார்.

வழிப் பயணத்தில் கோவலன் கண்ணகி ஆகியோருடன் துணை வந்த கவுந்தி அடிகள் இல்லாமலும்கூட காப்பியம் இயங்குமானாலும் காப்பியப் புலவர் தம் "உள்ளக்கிடக்கை" வெளிப்பட வாய்க்கும் குரலாகக் கவுந்தியடிகள் பாத்திரத்தை அமைத்துக் கொண்டார் என்பதும் ஏற்புடையது. இத்தனை விளக்கங்களுக்கிடையே கண்

படிப்பகம்

www.padippakam.com

ணகியை இன்பம் பெறாப் பெண்ணாகக் காட்டிய பான்மையும் நூலாசிரியரின் திறனாய்வுக் கவனத்தில் நுட்பமாக வெளிப்படுகின்றது.

சாத்தனார், 'கண்ணகி மீண்டும் பிறப்படைவதாகக் காட்டுவது பிழை எனத் துணிந்துரைக்கின்றார் திறனாய்வாளர். மானுடர் நோக்கில், மகப்பேறிலாக் கண்ணகி மலடியாகக் கருதப்படும் நிலையில் நின்றாலும் உண்மையில் தெய்வப் பெண்ணாகப் போற்றிக் காட்டப்படும் திறத்தைக் கொண்டு, அக் கருத்தை "முதிரா இளமுலைக் கையால் திருகி" என்னும் சொற்களில் காண்பிக்கும் முறை நுட்பமானது.

நூல் முழுதும் ஆசிரியரின் தனியான அணுகல் தெரிகின்றது. ஆராய்ச்சியாளர்கள் கையாளும் வரண்ட நடை இந்நூலில் இல்லை. இதற்காகவும் ஆசிரியரைப் பாராட்டலாம். கருத்து நுட்பங்கள் அடங்கிய சிறந்த நூல் இது.

—டாக்டர் மின்னூர் சீனிவாசன்

இங்கு எடுத்துக்கொண்டுள்ள இரு நூல்களும் கிடைக்குமிடம்: **நர்மதா பதிப்பகம், 16, ராஜா பாதர்தெரு, சென்னை 600017**

# கவிதை நூல்

## ஞாபகப் பூக்கள்

(கவிதைத் தொகுதி)

—துறவி—

பக்கங்கள்: 112 விலை ரூ.14

கௌதமன் பதிப்பகம்
14, நந்தனார் தெரு, விவேகானந்தர் நகர், சென்னை-600051

ஞாபகப் பூக்களின் முன்னுரையில் கவிஞரின் மன விசாலம் தெரிகிறது. நெருப்புக் கவிதைகள் பூப்பதில் மனம் கனியுமல்லவா! கவிதைகள் பூக்கட்டும்; வாசிப்பில் மகிழட்டும். இயற்கையை நேசிக்கும் இதயம் அரிதானது. எத்தகைய உண்மை! பொய்யாக்கிக் காட்ட சிலரே உள்ளனர். எதிலும் எப்போதும் வேகம்! பின் எங்கே ரசிக்க நேரம்! இந்த நிலையில் மாற்றம் வேண்டும்.

'ஆதியில் வார்த்தை இருந்தது' என்று வேதம் கூறுகிறது. 'வார்த்தை' என்னும் சக்திமிக்க சொல்லுக்குள் வைரத்தைக் காண்பவன் கவிஞன் அல்லவா!

'வெறும் எழுத்துதான்
முயன்று பார்
வார்த்தை ஆகலாம்!' எனும் வரிகளில் வார்த்தையின் முக்கியத்துவத்தை உணர்த்தி விடுகிறார் கவிஞர்.

'காலம் கேலி செய்யும்' கவிதை ஆரம்பம் முதல் நிறைவு வரை மிக் அருமையாக இருக்கிறது. வாழ்க்கை இனிமை நிரம்பியதாக இருக்க வேண்டுமானால், மனதை முதலில் லகு

படிப்பகம்

www.padippakam.com

வாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. முடியாத போதுதான் பிரச்சினைகள் உருவாகின்றன. பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை உண்டா? இல்லை. அவற்றோடு நடைபோட்டு, சில நேரங்களில் விலக்கிவிட்டு, தொடரும் பயணம்தானே வாழ்க்கை! வாழ்க்கையை உற்சாகமாக எதிர்கொள்ள வைக்கும் இனிய வரவேற்பு உரையாக இக் கவிதை திகழ்கிறது.

'உனக்காக ஒரு சிம்மாசனம்' கவிதையில்,

'உனக்குத் தெரியுமா?
உன் புன்னகைச் சுடரில்
எனது கவிதைகள்
புனலாடிக் கரையேறுவது?'
என்னையே
எனக்கு ஞாபகப் படுத்து
உன் புன்னகையில்'

என்னும் வரிகளில் அனுபவங்கள் பேசுகின்றன. வாழ்வில் வளமையை, வசந்தத்தை அறிமுகம் செய்வதும் அன்புதானே! அன்பு தொடர்ந்து, நட்புறவுகளை மேன்மையாய் வளர்க்க, வாழ்விலும் அர்த்தம் தென்படுகிறது. பாதிப்பு இல்லாமல் கவிதை பிறப்பதில்லை. பாதித்ததனால் பாதிக்கப் பட்டவை பதிகின்றன. மயிலிறகின் மென்மை இக்கவிதை. வெகுவாய் வசப்படுத்திய 'சிம்மாசனம்' 'ஞாபகப் பூக்களின்' வைரக் கிரீடம்.

'ஏக்கங்கள்'— அவற்றின் விளைவுகளை இத்தனை அழகாக எடுத்துச் சொல்ல எத்தனை அற்புதமான கருத்துகள்! அதிசயப்பட வைக்கின்றன.

'வாழ்க்கையின் தாகத்தை
உனக்குள் வார்த்து வைப்பதே
இந்த வெயில் சுடர்தான்.'

முத்திரைக் கவிதை இது.

'பட்ஜெட் படிக்கப்படுகிறது' என்னும் கவிதையில்,

'இந்தியாவைப் பொறுத்த
வரை
பட்ஜெட் என்பது
நோய்க்கு மருந்தல்ல;
மருந்தே இல்லாத
நோய்களின் பட்டியல்,'

எனும் வரிகள் நாட்டின் அரசியலைப் படம் பிடிக்கின்றன.

'பசி' என்னும் கவிதையில்,

'பசி பல்லக்கும் செய்கிறது
பாடையும் கட்டுகிறது
மனிதனே!
எதில் நீ ஏறப் போகிறாய்?'

என்று துறவியால் மட்டுமே கேட்க முடியும். 'சிவப்பு நிறமல்ல சித்தாந்தம்' என்னும் கவிதையில்,

'கிழக்கின் சிவப்பே
நமது லட்சியம்.
அதுவே விடியலின் விலாசம்.'

என்னும் வரிகள் கருத்துக் கருவூலம்.

நூலின் இறுதியில் கவிஞர் முன் எழுதிய மரபுக் கவிதைகளை இணைத்திருப்பது அடிப்படை இல்லாது எந்தப் புதுமையும் புரிந்திட இயலாது என்று இன்றைய இளங்கவிஞர்களுக்கு உணர்த்துவது போல் உள்ளது.

''ஞாபகப் பூக்கள்'' என்றும் மணம் பரப்பும்; மனதில் மகிழ்வை நிரப்பும்.

—இரா. ஆனந்தி,
—கருமலைப் பழம்நீ

படிப்பகம்

www.padippakam.com

# வித்தக நித்திலங்கள்

## அழகு மரம்

பூத்திருக்கும் சமயமெல்லாம்
பார்ப்பதற்கு அழகாய்த்
தோன்றும் ரோஜாச் செடி.
பார்க்கும்
சந்தர்ப்பங்களிலெல்லாம்
ஆக்ரமிக்கும் ஆலமரம்:

ஓங்கி உயர்ந்தாலும்
தாங்கும் மண்ணிற்கு
விழுதுகளை அனுப்பி
விசாரித்துக் கொண்டிருக்கும்
ஆல மரம்கூட
அழகு மரம்தான்!

-ரங்கநாதன்

○

## வரிகள்

வார்த்தைக்கு வார்த்தை,
வரிக்கு வரி, வரி போடவா
நாங்கள் உங்களுக்கு
வாக்களித்தோம்?

இதற்கொரு நிதிமந்திரி
தேவை இல்லையே.

எங்கள் கிராமத்துக்
கணக்கு வாத்தியாரே
போதுமே!

சேரன்செங்குட்டுவன்

## என்ன இல்லை?

செத்துப் போயிருந்த நீள பாய்
நீலம் பூத்துக் கிடந்தது.
நடந்து கொண்டிருக்கும்
திருமணத்தின்
வரதட்சணைக் காச நோயால்
வெற்றிலை பாக்குகள்
ரத்தம் கக்கின.
மாப்பிள்ளை மேற்கில்
வெளிச்சம்.
மணமகள் கிழக்கில்
இருட்டு.
வாழ்வில் சிரிப்பே
இருக்கக் கூடாதென
பளீரென்று சிரித்திடும்
பச்சரிசிக்கும் மஞ்சளைத் தடவி
மறைத்துவிட்டார்கள்.
கல்யாணக் குத்தகையின்
தாலிப் பத்திரம்
தாளங்களின் அழுகையில்
தளைப்பட்டு விட்டது.
அத்தனையும் அழுதன.
ஆனால்,
மண்டபத்திலுள்ள சிற்பங்களும்
மனிதர்களும் மட்டுமே
அழவில்லை.
கற்சிலைகளுக்குத்தான்
கண்ணீர்ச் சுரப்பிகள் இல்லை.
மனிதர்களுக்கு?

-சகாரா



படிப்பகம்

www.padippakam.com

—குழந்தைங்கறது அழகான விஷயம்- என்று சொல்லும் இக் கதையின் நாயகனை எங்களுக் குப் பிடித்திருக்கிறது. ஆகவே, இதனை வெளியிடுவதைத் தவிர்க்க இயலவில்லை. நாயகி சந்தியா 'சந்யா'வாகச் சுருங்கி விட்டாள். பெயரில் மட்டுமா, பெண்மைக் கனிவான தாய்மை யிலும்தான். எதார்த்தம் புதிய வர்களை அதீதமாக மிரட்ட வேண்டாமே.—

# நிகழ் பதிவுகள்

/சு. சுரேஷ் ரவி/



சேது சைக்கிளை விட்டு இறங்கும் போதே அம்மாவைப் பார்த்துவிட்டான். கிழக்குப் பார்க்க இருந்த வேப்ப மரத்தி லிருந்து விழுந்திருந்த சருகு களையும் பழங்களையும் கூட் டித் தள்ளிக் கொண்டிருந்தாள். அம்மாவுக்கு எதுவுமே சுத்த மாக இருக்க வேண்டும். உள் ளும்—புறமும் இரண்டுமே. அம்மா சாதாரணமாகவே அழகு அதிலும் வெயிலில் வேப் பம் இலைகளின் நிழல் அம்மா வின் மீது விழுந்து அவள் கட்டி யிருந்த புடவையில் தெரிய இன் னும் அழகாய் இருந்தாள். இவன் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு உள்ளே போகையில் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த் தாள்.

'சேது உன்ன பார்க்க சந்யா வந்திருந்துச்சு.'' அம்மா சொன்னது சேதுவிற்கு சந்தோ ஷத்தை உண்டு செய்தது.

''சாயந்திரம் நீ ஆபீஸிற்கு வருவியாம் உங்கிட்டே ஏதோ பேசனுமாம்''

சேது மணியைப் பார்த் தான். 2-20. சந்யாவிற்கு 5க்கு முடியும். அதுவரை என்ன செய் வது? எதற்கு வரச் சொல்லி யிருப்பாள்.

''உன்னோட விருப்பப் படியே அமையட்டும், சேது. எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை,'' என்று சொல்வதற் காக இருக்குமோ. மனசு பர பரத்தது.

''என்னடா? சைக்கிள வச் சிகிட்டு நின்னுட்ட. சந்யா எதுக்கு வரச்சொல்லி யிருக்கு மோனா?''

''ம்... சந்யா , சம்மதம் சொல்லி நான் வீட்டுக்குக் கூட் டிட்டு வந்த பிறகு உங்களுக்கு எதுவும் ஆட்சேபணையில் லையே?''

''ச்சீ...ச்சீ. ரெண்டோட மூனா அதுவும் இருந்துட்டுப் போகுது. உனக்கு இஷ்டம்னா எனக்கும் இஷ்டம்தான்.'' அம்மா இப்படித்தான். சேது விற்காக அனைத்தும் ஏற்பவள்.

படிப்பகம்

www.padippakam.com

''தினமும் நீங்க சமைக்கிறீங்க. இன்னைக்கு நான் சமைக்கிறேன்,'' என்று லீவு நாட்களில் பிடிவாதமாய் சேது கேட்கும் போதெல்லாம், ''வேண்டாம் என் பிள்ளைக்குச் செய்யாமல் வேறு யாருக்கு செய்யப் போகிறேன்,'' என்று மறுத்து ஈறு தெரியாமல் சிரித்து, மனதைக் குளிரச் செய்து விடுவாள். சந்யாவும் அம்மா மாதிரிதான்.

சந்யா அவனை முதலில் சந்தித்தது வினோதினியின் திருமணத்தில்தான். உரித்து வைத்த தென்னம் பாளைகள் மாதிரி வளைய வந்த பெண் பிள்ளைகளையோ, சின்ன குங்குமச் சிமிழ்கள் மாதிரியான குழந்தைகளையோ, குழந்தையின் ஸ்பரிசம் மாதிரி மனசைத்தொட்ட நாதஸ்வர இசையையோ முக்கியமாகத் தன்னையோ கவனிக்காது, 'எனக்கென்ன' என்பது மாதிரி உட்கார்ந்திருந்தது சந்யாவிற்கு அவன் மீது கோபத்தை உருவாக்கியது.

'யார்டி அந்த சாமியார்?'' சந்யா கேட்டாள்.

விநோதினி சந்யாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ச்சீ, சும்மா கேட்டேன்டி, இவளே.''

திருமணம் முடிந்த பிறகு விநோதினி அவனை இவள் எதிர்பாராத போது அறிமுகப் படுத்தி வைத்தாள். சந்யாவிற்குத் தான் அதிகம் வெட்கப்படுவதாய்த் தோன்றியது. அவன் கேட்டுக் கொண்டதன் பேரில் வினோதினியிடமும், அவள் கணவனிடமும் விடை பெற்றுக் கொண்டு சில முக்கிய இடங்களுக்கு அவனை அழைத்துச் செல்லச் சம்மதித்துப் புறப்பட்டாள்.

''எங்க ஊரைவிட இங்க ரொம்ப அமைதியா இருக்கு'' சந்யா இடைமறித்தாள். ''உங்க ஊர்ல எப்போ காவிரி ஆறு வந்தது?''

சிரித்தான். ''நான் இந்தக் காவிரிக் கரையெ சொல்லல. ஜங்ஷனை சொன்னேன்.''

''அமைதியா இருக்க எல்லாமே அழகில்லையா?'' என்று சந்யா சொன்னாள்.

''ஆமாம் உங்கள மாதிரி''

சந்யாவைச் சட்டென்று தாக்கியது, இப்படித்தான்.

வினோ திருமணம் முடிந்து இவனோடு சுற்றிவரும் இரண்டு நாட்களாய் எதிராளியின் முகத்தில் சட்டென்று பன்னீர் தெளித்தது மாதிரி பேசி விடுகிறான்.

''என்ன சந்யா அமைதியாயிட்டிங்க?'' கரம் பற்றினான். விலகி, ஜன்னல் அருகே வந்து நின்றாள்.

''நாளைக்குப் புறப்படறேன், சந்யா.''

திரும்பிப் பார்த்தாள்.

''வினோதினி வரும் போது நீங்களும் ஒரு நாள் எங்க ஊருக்கு வாங்களேன்.'' சொல்லிவிட்டு இவளைப் பார்த்தான்.

''வர்றேன்.''

''இந்தப் புடவையில் நீங்க அழகா இருக்கீங்க சந்யா''

இவள் இங்கு வந்த பிறகு இரண்டாவது தடவையாக

படிப்பகம்

www.padippakam.com

இதைச் சொல்கிறான். நேற்று ஷாப்பிங் போனபோது இவன் வாங்கிக் கொடுத்ததுதான்.

மறுபடியும் ஜன்னல் வழியே பார்த்தாள்.

○

''ரொம்ப நேரம் காக்க வச்சுட்டேனா, சேது?'' சேது நிமிர்ந்தான். எதிரே சந்யா துடைத்துவைத்த குத்துவிளக்கு மாதிரி நின்றிருந்தாள்.

''இல்ல. இப்பதான் வந்தேன்.'' ''முக்கியமான வேலை ஏதாவது இருக்கா, சேது?''

''இல்ல.''

''வாங்களேன். காபி குடிச்சுக்கிட்டே பேசுவோம்.''

இருவரும் அருகிலிருந்த சிற்றுண்டி சாலைக்குப் போனார்கள். சேது வழக்கமாய் உட்காரும் ஜன்னல் ஓர இருக்கையில் அமர்ந்தான். பணியாளிடம் இனிப்புக்குச் சொல்லிவிட்டு சந்யா சேதுவைப் பார்த்து பேசத் துவங்கினாள்:

''உடல் நலம் எப்படி இருக்கு, சேது?'' குரலில் நிஜமான அக்கறை தெரிந்தது.

''பரவாயில்லை, சந்யா. இன்னும் இரண்டு நாளில் வேலைக்குத் திரும்பிடுவேன்.''

''நான் ரொம்ப நாளா கேட்டுக்கிட்டு இருந்த மாற்றல் வந்திடுச்சு, சேது.''

''சந்தோஷம்.''

''நன்றி. நான் எதுக்கு உங்கள வரச்சொன்னேன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும், இல்லையா, சேது?''

சேது சிரித்தான்.

''எனக்குச் சம்மதம் சேது.''

சேது நன்றியோடு சந்யாவின் கைகளைப் பற்றினான். எவ்வளவு நாட்கள் இதற்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று! இதே இடத்தில் இரண்டாண்டுகளுக்கு முன் சந்யாவோடு பேசியது நினைவுக்கு வந்தது.

○

''பேசனும்னு சொல்லிட்டு மௌனமா இருந்தா எப்படி?'' கேட்ட சேதுவை சந்யா பார்த்தாள்.

''சேது, நீங்க எனக்கு ஒரு உதவி செய்யனும்.''

''நிச்சயமாக.''

''நான் கர்ப்பமா இருக்கேன், சேது.'' சொல்லிவிட்டு, பேசாமல் இருந்தாள்.

சேதுதான் பேசினான். ''இப்ப என்ன செய்யனும்?''

''கலைக்கனும், சேது. நீங்க கூட வரனும்.'' சேது யோசித்தான். ''குழந்தை வேண்டாம்னு நீங்க கருதியிருந்தா அதை முன்னாடியே தவிர்த்திருக்கலாம் சந்யா. இப்ப பாவம் இல்லையா?''

''இல்லை சேது. அது பிறந்தாதான் பாவம். ஏதோ ஒரு சந்தர்ப்பத்துல நான் ஏத்துக்கிட்டது. இப்போ எனக்கு அசிங்கமாப்படுது.''

''பாவம், சந்யா.''

''இல்ல சேது, இதுக்குக் காரணமானவரைப் பற்றி...'' சேது இடை மறித்தான். ''அது எனக்குத் தேவையில்லாத விஷயம். ஆண் பெண் இருவரும் இணைவது அவர்களோட தனிப்பட்ட விஷயம். இந்த விஷயத்துல, அதாவது குழந்தை விஷ

படிப்பகம்

www.padippakam.com

யத்துல நான் எதுக்கு உங்ககிட்டருந்து வேறு படறேன்னா குழந்தைங்கறது அழகான விஷயம், சந்யா. இப்ப கலைக்கிறது கொலையில்லையா,''

''எனக்கு வேண்டாம்.''

''எனக்குக் கொடுங்க, சந்யா.'' அவன் குரலில் எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் சந்யா வேறு விதமாக நடந்து கொண்டாள். குழந்தையை ஒரு அனாதை இல்லத்தில் சேர்த்துவிட்டாள். சேது கேட்ட போது, ''உங்களுக்கு எதுக்கு கஷ்டம் சேது?'' என்று சொன்னாள். ''நீங்க சொன்னது போல முன்பே தவிர்த்திருக்கனும். ஏமாந்துட்டேன். மூனாவது மாதத்துல வந்து கலைக்க நெனச்சது கொலைக்குச் சமம். உண்மை, சேது. பாவத்துலஇருந்து என்ன காப்பாற்றினதுக்கு நன்றி,'' என்றாள்,

சேதுஅவளைத்தொடர்ந்து கேட்டு வந்தான். குழந்தையை வளர்ப்பதில் தனக்கு எவ்வித சிரமமுமில்லை என்றான்.

நீண்ட இடைவெளிக்குப் பின் 'குழந்தையைக் கூட்டிச் செல்ல தனக்குச் சம்மதம்' என சந்யா சொன்னது சேதுவிற்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது.

இருவரும் சிற்றுண்டிச் சாலையை விட்டு வெளியே வந்தனர்.

''இந்த வாரம் நான் புறப்படறேன் சேது. குழந்தையை எப்ப கூட்டி வரப் போறீங்க?''

''நீங்க வந்து சொல்லனும் இல்லே?''

''ஆமாம்.''

''நாளைக்குப் போவோமா?''

''சரி.''

சந்யாவை அனுப்பிவிட்டு வீடு திரும்பினான்.

குழந்தையை இல்லத்திலிருந்து அழைத்து வரும் போது சந்யா சொன்னாள்: ''ஆபீஸ்ல எல்லோரும் என்ன கேள்வியோட பார்த்தபோது நான் உங்களைத்தான் சேது கை காட்டினேன்.''

சேது சிரித்தான். ''என்ன யாரும் கேக்கலியே!''

''பயம் இருந்திருக்கும். அன்னைக்குச் சொன்ன மாதிரி இன்னைக்குக் குழந்தை உங்ககிட்டவே வந்திடுச்சு. சரி, சேது. நான் புறப்படறேன்.'' சொல்லிவிட்டுப் போய் விட்டாள். கீழே விட்டதைப் போகிற போக்கில் ஒருவன் எடுத்துத் கொடுத்து விட்டுப் போவது மாதிரி, குழந்தையைக் கையில் கொடுத்து விட்டுப் போய்விட்டாள் நிரந்தரமாக.

நீண்ட நாட்கள் கழித்து சந்யாவிடமிருந்து சேதுவிற்கு ஒரு கடிதம் வந்தது. சேது அவசர அவசரமாகப் பிரித்தான். திருமணப் பத்திரிகை. அவன் கண்டிப்பாக வரவேண்டும் என்று எழுதியிருந்தது. குழந்தையைப்பற்றி அவள் ஒன்றும் எழுதாதது சங்கடமாய் இருந்தது. குறிப்பிட்ட தேதியில் சந்யாவின் திருமணத்திற்குச் சேது குழந்தையோடு போய் வந்தான். ○

படிப்பகம்

www.padippakam.com

அவள் மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் கண்களும் முகமும் கருணை மயமாகக் கனிந்தது. அவனை ஒரு குழந்தையைப் போலப் பார்த்தாள். 'இப்படி ஒரு தூய்மையா! இப்படி ஒரு பாவனையா!' என்று அவள் நெஞ்சு விம்மியது.

"இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்றான்.

"உங்கள் மனத்தில் ஓர் இலயிப்பு விழுந்ததும் நீங்கள் அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியிருக்க வேண்டும். அவள் புன்னகை செய்திருப்பாள்; அல்லது முறைத்துவிட்டுப் போயிருப்பாள். விஷயம் அத்தோடு முடிந்திருக்கும்," என்றாள்.

"என்ன கடுமையான விமர்சனம்!"

"அது சரி, ஒரு பெண்ணைப் பார்த்துக் கண் சிமிட்டுவது பாவம் என்று நினைக்கிறீர்களா?"

"பாவமோ, புண்ணியமோ. கேவலம் என நினைக்கிறேன்."

"ஒரு பெண் அடிவயிறும், மார்பும், தோளும் தெரிய, நடக்கவே தெரியாதவள் போல நழுவி நழுவித் தெருவை அளந்து கொண்டு போவதைக் கேவலம் என்று நினைக்கவில்லை தெரியுமா? நீங்கள் கண்ணடித்தால் அதை வெகுமதியாகவே பாவிக்கும் பெண்கள் இருக்கிறார்கள். செத்த பிணத்தைப் பல்லாயிரம் கழுகுகள் வந்து பற்றிக் கிழிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அதுபோல பெண் ஒரு பிணமாகத் தன்னைத் தெருவில் நிறுத்திக் கொள்ளும் போது, பல்லாயிரம் கழுகுக்கண்கள் அவளைப் பற்றிக் கிழிக்கின்றன. இது ஒரு சோரமே அல்லவா? விஷக்கண்கள் தன்னைச் சோரப்படுத்துவதைக் கண்டு கூசிச் சாகாமல், அதைக் கிடைத்தற்கரிய இன்ப அதிர்ச்சிகளாகத் தாங்கிக் கொண்டு, இன்னும் இன்னும் என்று இழைகிறாளே? இது எத்தனை காட்டுமிராண்டித்தனம்! கேட்டால் தான் சுதந்திரமுள்ளவள் என்பாள். கேவலப்பட்டு நிற்பதற்கு ஒரு சுதந்திரமா? கேட்டால் ஆண்கள் என் அடிமைகள் என்பாள். உண்மையில் அவள்தான் அடிமைப்பட்டு, ஆன்மாவை விற்று விட்டு, பிணம்போல வீழ்ச்சியுறுகிறாள் என்பதை அவள் உணர்வதில்லையே? இந்தச் சமுதாயத்தில் பெண் தன்னைத்தானே மீளாத அடிமைத்தனத்தில் ஆழ்த்திக் கொள்கிறாள். அவளுக்கும் ஓர் ஆன்மா உண்டு; அதைச் சுதந்திரமாய் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதெல்லாம் மறந்தே போயின. ஆண்களின் விஷப்பார்வைக்காக ஏங்கிப்போய்த் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிறந்த மேனியாக்கிக் கொண்டு திரியும் விபசாரத்தை என்று அவள் உணரப்போகிறாள்? உணர்ந்து என்றைக்கு ஈடேறப் போகிறாள்?"

**கவிதாசரணின் "சரண்" நூலில் இருந்து.**

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, Mar. 1992. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY In TAMIL R. Dis. 5479/90

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

# மூசா இலக்கியம்
# MUSA ILAKKIYAM

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019



சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்